
மாலை : 50 மணி : 11 நவம்பர் 2008 விலை ரூ.10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு



திருவண்ணாமலையில் முருகப்பெருமானால் தடுத்தாட் கொள்ளப்பட்டு
சந்தப்பாக்கள் எண்ணிலாதன பாடி அழியா இன்பம் பெற்ற
தவத்திரு அருணகிரி நாதசுவாமிகள்

உ
சிவமயம்

☎ 2654 0706
Website : www.thiruvalitayam.com



ஸ்ரீ தட்சிணாமூர்த்தி
திருவலிதாயம் - பாடி, சென்னை

# அருள்மிகு திருவல்லீஸ்வரர் திருக்கோயில்

## குரு பரிகாரஸ்தலம், (திருவலிதாயம்), பாடி,

அம்பத்தூர் வட்டம், சென்னை-600 050

(தமிழக அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிர்வாகத்திற்குட்பட்டது)

## குருபெயர்ச்சி 3 நாட்கள் சிறப்பு இலட்சார்ச்சனை விழா

**நாள் : 04-12-2008, 05-12-2008, & 06-12-2008**

ஓம் நமோ பகவதே
தக்ஷிணாமூர்த்தியே!
மஹ்யம் மேதாம் பிரக்ஞாம்
ப்ரயச்ச ஸ்வாஹா!

பேரன்புடையீர்!

தொண்டை நாட்டு பாடல் பெற்ற 32 சிவாலயங்களில் ஒன்றானதும், வியாழ குரு வழிபட்டு பாப நிவர்த்தி பெற்றதன் காரணமாக திருவலிதாயம் குருஸ்தலம் எனப் பெயர் பெற்றதும், தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர், வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் மற்றும் பாம்பன் சுவாமிகள் உள்ளிட்ட அருளாளர்களால் பாடப்பெற்றதும், ஆலங்குடி தென்குடிதிட்டை, கோவிந்தவாடி, திருச்செந்தூர் போன்ற முக்கிய குருஸ்தலங்களில் ஒன்றானதும் சூரியன் - சந்திரன் - இந்திரன் - இமயன் -ஸ்ரீமகாவிஷ்ணு - ஸ்ரீராமர் - ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ பரத்வாஜ மாமுனிவர் ஆகியோரால் பூஜிக்கப்பட்டதுமான அருள்மிகு ஜெகதாம்பிகை உடனுறை திருவல்லீஸ்வரர் திருக்கோயிலில் நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை மாதம் 21ம் தேதி 6-12-2008 (சனிக்கிழமை) காலை 10.48 மணிக்கு அருள்மிகு குருபகவான் தனுசு ராசியிலிருந்து மகர ராசிக்கு குருபெயர்ச்சியாவதை முன்னிட்டு அருள்மிகு தட்சிணாமூர்த்தி மற்றும் வியாழ குருபகவானுக்கு, குருபெயர்ச்சி சிறப்பு இலட்சார்ச்சனை விழா 4.12.2008, 5.12.2008 மற்றும் 6.12.2008 ஆகிய 3 நாட்களில் மிகவும் சிறப்பாக நடைபெற உள்ளது.

# இலட்சார்ச்சனை

## கட்டணம் ரூ.150.00 நேரில் / தபாலில்

அருள்மிகு குருபகவான் உருவம் பொறித்த 2 கிராம் வெள்ளி டாலர் இலட்சார்ச்சனை பிரசாதத்துடன் வழங்கப்படும்.

**குரு பரிகார சாந்தி செய்து கொள்ள வேண்டிய ராசிதாரரர்கள்,**
**மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், விருச்சிகம், மகரம், கும்பம்**

குறிப்பு : குருப்பெயர்ச்சி விழா 6.12.2008 சனிக்கிழமை முடிவுற்று மறுநாள் 7.12.2008 (ஞாயிற்றுகிழமை) 1008 சங்காபிஷேகமும் நடைபெறும். சங்காபிஷேகத்தில் பங்குபெறவிரும்பும் பக்தர்கள் ரூ.150 இலட்சார்ச்சனை விழா கட்டணத்தை நேரிலோ/ தபாலிலோ செலுத்தி பூஜையில் வைக்கப்பட்ட குருபகவான் வெள்ளி டாலர் பிரசாதத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

நேரில் வர இயலாத பக்தர்கள் இலட்ச்சார்சனை கட்டணம் ரூ.150 நிர்வாக அதிகாரி, மேற்படி திருக்கோயிலின் பெயரில் மணியார்டர், வங்கி டிராப்ட் ICICI வங்கி கணக்கு எண். 602701217206ல் செலுத்தி பெயர், ராசி, நட்சத்திரம், லக்னம், கோத்ரம், விவரம் தெரிவித்து தபால் மூலம் வெள்ளி டாலர் மற்றும் விபூதி பிரசாதம் பெற்றுக் கொள்ளலாம்.

திருவலிதாயம் தனி சன்னதியில்
ஸ்ரீ வியாழ குருபகவான்



குரு பார்க்க கோடி நன்மை

வழித்தடம் :அம்பத்தூர் ஆவடி மார்க்கம் City Bus Stop - Lucas - TVS பாடி (படவட்டம்மன் கோவில்) கோயம்பேடு - அம்பத்தூர் O.T.- திருமங்கலம் வில்லிவாக்கம் (Bus Depot) கொரட்டூர் (ரயில் நிலையம்) 3 கி.மீ தொலைவில்.


**திரு.வெ.சாரங்கபாணி** MA., BL.
நிர்வாக அதிகாரி

**திரு.பி.எஸ். சண்முகசுந்தரம்**
பரம்பரை அறங்காவலர்

திருவலிதாயம் வருக! குருவருள் பெற்று வளமுடன் வாழ்க!

விளம்பர உதவி : திரு.T. முருகேசன் (திருக்கோயில் உபயதாரர்)
சுபா ஸ்டோர்ஸ்
64, எம்.டி.எச். சாலை, பாடி, சென்னை-600 050. போன் : 2623 1111, 2654 2222

sskcomputers.ch-50.cell:9940241787



திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2039 - கார்த்திகை மாதம்
மாலை : 50 மணி : 11 நவம்பர் 2008

## அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

**வணக்கம்.**

''அறுமீன் பயந்த அறம்செய் திங்கள் கார்த்திகை நாளில்
கந்தனைத் தொழுமின்''

இறைவனை சமயங்கள் யாவும் ஒளிவடிவாகவே போற்றுகின்றன. ''தீபமங்கள ஜோதி நமோ நம'' என்கிறார் அருணகிரிநாதர். ''ஜோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே'' என்கிறது மணிவாசகரின் திருவாசகம்.

இறைவனை சோதியாகவும், சோதிவீசும் விளக்குகளாகவும் வழிபடும் மாதம் கார்த்திகையாகும். கார்த்திகையானது அனலோடு தொடர்புடைய நட்சத்திரமாகும். கார்த்திகையில் அக்னி வடிவாக முருகன் தோன்றினான். அவனைப்பாடி அருள்பெற்றவர் பலர் என்றாலும், அவர்களில் உன்னத நிலையில் வைத்து போற்றப்படுவர் தவத்திரு அருணகிரிநாதர் ஆவார். அவர் திருவுருவத்தை முகப்போவியமாகக் கொண்டு இந்த மாதஇதழ் மலர்கிறது.

கார்த்திகை மாதம் முழுமதிநாளில் கிருத்திகை நட்சத்திரமும் சேர்ந்து வரும் அந்த நாளையே கார்த்திகை தீப விழா என்ற பெரும் பண்டிகையாகக் கொண்டாடி வருகின்றோம். இந்நாளில் தென்னகம் எங்கும் இல்லங்களில் வரிசை, வரிசையாக விளக்கேற்றி வழிபடுகின்றனர். இந்த கார்த்திகை தீபவிழா திருவண்ணாமலையில் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் சிவ பெருமான் அர்த்தநாரீஸ்வரராக நின்று திருநடனம் புரிகின்றார். அந்தக் காட்சியை வண்ணப்படத்தில் காண்கிறோம்.

கார்த்திகை தீப விழாவின் சிறப்புகளைத் தொகுத்து வழங்கியுள்ளார் புலவர் ஆட்சிலிங்கம் அவர்கள். அக்னி மண்டலத்தின் நடுவே வேதமந்திரங்களை ஓதி உயர்வு பெற்ற உருத்திரபசுபதிநாயனாரின் பெருமைகளை காண்கிறோம். உருத்திரம் ஒன்றாய் பலவாய் விளங்குகின்ற பெருமானை பலபடப்பேசுகிறது. அதன் நினைவுகளாக ''ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு'' என்ற கட்டுரை விளக்குகிறது.

தீபஒளி பொங்கும் நாளில் சிவநெறி விளக்கிய அறிவியல் பேரொளியை பொறியாளர் திரு. குப்புசாமி அவர்கள் விளக்குகிறார்.

வைணவ ஆச்சாரியர்களில் தனிச்சிறப்பு பெற்றவரும் பெருமாளுடன் தினமும் பேசி மகிழ்பவருமான திருக்கச்சி நம்பிகளின் அவதாரத்தலமான பூவிருந்தவல்லியின் தனிச்சிறப்புகளைப் பேசும் வகையில் திரு. ஏ.எம்ஆர். அவர்களின் ''பேரருளான தாசனுடன் பேசிய பெருமாள்'' என்னும் சிறப்பு கட்டுரை வெளியாகி உள்ளது.

பனையபுரம் அதியமானின் சிவராத்திரி மகிமை கூறும் திருவைகாவூர்.... திருத்தல சிறப்புகளும், திருமால் அடியார்களின் பெருமைகளைப்பேசும், முனைவர் பரந்தாமனின், ''திருமாலடியார்களும், திருவரங்கனும்,'' எனும் கட்டுரையும், திரு. இராமநாதப்பிள்ளையவர்களின் உலகம் உய்ய உதித்த உடையவர், கட்டுரையும் வெளிவந்துள்ளன.

இவை அனைத்தையும் படித்துப் பயன்பெற அன்புடன் அழைக்கிறோம்.

அழல்வடிவாய அண்ணாமலை எம் அண்ணல் அருளால் அறிவில் தெளிவும், மனதில் நிம்மதியும், செயலில் நல்உறுதியும் உண்டாகி எல்லோரும் மேன்மைமிக்க நல்வாழ்வைப் பெற்று இன்பமுடன் வாழ வேண்டுமென்று இந்த கார்த்திகை தீப ஒளித் திருநாளில் இறையருளைச் சிந்திக்கின்றேன்.

வாழ்க! வளர்க, நலமுடன்! வளமும் சூழ்க!!

அன்புள்ள

(கு. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
முதன்மை செயலர்/ஆணையர்

இந்து சமய அறநிலையத்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

# குறளோவியம்



“மலையா! நமது ஊர்க்கூனனும் குள்ளனும் எப்போது பார்த்தாலும் உன்னைப் பற்றியே இழித்துப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் நேற்றிரவு பக்கத்துச் சிற்றூரில் மணவிழா விருந்தொன்றுக்குப் போயிருந்தேன். அங்கே இந்தக் கூனனும் குள்ளனும் வந்திருந்தார்கள். விருந்துக்கிடையே உன்னைப் பற்றிய பேச்சு வந்தது. அந்த இருவரும் உன்னைத் தாக்கிப் பேசிக்கொண்டேயிருந்தார்கள்.”

தன் நண்பர் மலையனிடம் சிலம்பன் இந்தச் செய்தியைக் கூறும்போது மலையனின் மற்றொரு நண்பன் கலிங்கனும் அருகே இருந்தான். கலிங்கன் கண்களில் கனல் பறக்கச் சிலம்பனைப் பார்த்துக் கேட்டான்.

''அவர்கள் மலையனை இழிவுபடுத்திப் பேசும்போது நீகேட்டுக் கொண்டா இருந்தாய்?''

சிலம்பன் விடையளித்தான்- ''கேட்டுக் கொண்டிராமல் என்ன செய்வது, அவனிடம் போராட்டமா நடத்த முடியும்? கூனன் ஒரு அறிவிலி! குள்ளன் ஒரு தற்கறி! இரண்டு பேருக்கும் ஊர் வம்பு பேசத்தான் தெரியும். அவர்களோடு பேசினால் நமது நேரம்தான் கெடும்.''

''அட! அவர்களோடு சண்டை வேண்டாம் அய்யா! அவர்களின் அவதூறுக் கற்பனைகளை விருந்துக்கு வந்திருந்தவர்களில் சிலராவது நம்பியிருக்கக்கூடுமல்லவா? அவர்களுக்காவது உண்மை நிலையை விளக்கிச் சொல்லி, மலையன்மீது வேண்டுமென்றே மாசு கற்பிக்கிறவர்களின் வேடத்தைக் கலைத்திருக்கலாம் அல்லவா?''

இப்படிக் கலிங்கன் கேட்டதும், சிலம்பன், பதில் ஏதும் அளிக்காமல் தன் பேச்சைவேறு திசைக்குத் திருப்பினான்.

''மலையன்மீது எனக்குப் பற்றோ பாசமோ இல்லாதது போலவும், யாரோ சிலருக்குத்தான் மலையனிடம் உண்மையான அன்பு இருப்பது போலவும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் மலையனை என் உயிரினும் மேலாக நேசிக்கிறேன் என்பது மற்றவருக்குத் தெரியாவிட்டாலும் மலையனுக்குத் தெரியும். மலையன் இல்லையேல் இந்த ஊரே பாழாகியிருக்கும் என்பதை நான் அறியாதவனல்ல. மலையா! எனக்கு வேறு ஒரு அவசரமான பணி இருக்கிறது. பிறகு வந்து பார்க்கிறேன்''.

-எனக் கூறியவாறு, சிலம்பன் அதை விட்டு அகன்றான். சிலம்பன் சென்றவுடன் கலிங்கன் மலையனைப் பார்த்துக் கேட்டான்.

''ஆமாம்! இந்தச் சிலம்பன் எப்போது பார்த்தாலும் நமது ஊர்க் கூனனையும், குள்ளனையும் பற்றியே உன்னிடம் சேதிகொண்டு வருகிறானே, என்ன காரணம்? அவர்கள் ஏதாவது உன்னைப்பற்றிக் குற்றமாகப் பேசினால் இவன் அந்த இடத்திலே உள்ளவர்களுக்கு உண்மையை விளக்கிச் சொல்வது தானே சரி! அதை விடுத்து, எப்போது பார்த்தாலும் கூனனைப் பற்றியும் குள்ளனைப் பற்றியும் உன்னிடம் எதற்காகக் குறைகூறித் திரிய வேண்டும்?''

கலிங்கனின் கேள்விக்கு மலையன் பொறுமையுடன் பதில் சொன்னான்.

''கலிங்கா! என் நண்பன் சிலம்பனின் இயல்பை நீஉணரமாட்டாய்! நான் அவன்

இயல்பை சரியாக கணக்கிட்டு வைத்திருக்கிறேன். அயலார்களான குள்ளன், கூனன் இருவரைப் பற்றியும் சிலம்பன் நம்மிடம் குற்றம் குறை சொல்கிறானே, அவற்றில் பாதிக்குமேல் நான் நம்புவதில்லை. ஏனெனில் சிலம்பன் நெருங்கிப் பழகுகிற உயிர் நண்பனான என்னைப் பற்றியே புறங்கூறித் திரிகிறான் என நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நண்பனே இவ்வாறு புறங்கூறிடும் இயல்புடைத்தவனாயிருக்கும்போது அயலார் நம்மைப் பற்றிப் பேசுவது குறித்து நான் என்ன சொல்ல இருக்கிறது? அதுமட்டுமல்ல, கலிங்கா! கூனனும் குள்ளனும் அப்படிப் பேசினார்கள் என்பதைத்தான் எப்படி நம்ப முடியும்? இவனே ஒருவேளை, என்னைப் பற்றிப் பேசிப் புறங்கூறிவிட்டு, அவர்களைப் பற்றி என்னிடம் பழி போடலாமல்லவா? நெருங்கிய நண்பர்களைப் பற்றியே குறை கண்டு புறங்கூறித் தூற்றுகின்ற இயல்புடையவர்கள், அயலார்களைப் பற்றி என்ன சொல்வார்கள் என்பதை நாமே சிந்தித்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமல்லவா? இதைத்தான் வள்ளுவர், வியப்புக் கலந்த வினாவாக எழுப்புகிறார், இதோ கேள் அந்தக் குறள்!''



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்

''நுன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்

என்னைகொல் ஏதிலார் மாட்டு''

மலையன் அமைதி தவழும் முகத்துடன் அளித்த இந்த விளக்கத்தைக் கேட்டுக் கலிங்கனின் கண்களில் நீர் துளிர்த்தது. அது அவர்களின் நட்பின் ஆழத்தை உணர்த்தியது. புறங்கூறும் நண்பர்களையும் மலையன் எப்படிப் பொறுத்துக் கொள்கிறான் என்ற உண்மையையும் வெளிப்படுத்தியது.

அதிகாரம் - 19 புறங்கூறாமை பாடல் - 188

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது

## இதழின் உள்ளே ...


| | | |
|---|---|---|
| 1 | வளைக்கை மடநல்லார் தொல் கார்த்திகைத் திருநாள் -திரு. பூசை ச.ஆட்சிலிங்கம் | 5 |
| 2 | ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு | 7 |
| 3 | உருத்திர பசுபதி நாயனார் - திரு.க.சுகுமாரன் | 11 |
| 4 | உலகம் உய்ய உதித்த உடையவர் - திரு. பெ.இராமநாதபிள்ளை | 14 |
| 5 | சென்னையில் ஒரு குருஸ்தலம் - திருவலிதாயம் (பாடி) - திருமதி வசந்தா சுரேஷ்குமார் | 18 |
| 6 | பேரருளான தாசனுடன் பேசிய பெருமாள் - திரு. ஏ.எம்.ஆர் | 22 |
| 7 | திருக்கோயில்களின் வளர்ச்சி நிலை - டாக்டர் திருமதி இராதா தியாகராஜன் | 26 |
| 8 | திருமாலடியார்களும் திருவரங்கனும் - முனைவர் ஏ.பரந்தாமன் | 32 |
| 9 | ஓங்கி உலகளந்த உத்தமன் - திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் - நினைவலைகள் | 34 |
| 10 | சிவராத்திரி மகிமை கூறும் திருவைகாவூர் - பனையபுரம் அதியமான் | 37 |



திருவண்ணாமலை - அண்ணாமலையார் திருக்கோயிலில் உள்ள அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் பெருமான் கார்த்திகைத் தீபத் திருநாளில் மலையில் தீபம் ஏற்றும் போது கொடி மரத்திற்கு அருகில் தீப்பந்தங்கள் சூழ திருநடனம் புரிகின்றார். இந்த நடனமே முக்திபேற்றை அளிக்கும் பேரானந்த தாண்டவமாகும்.

## வளைக்கை மடநல்லார்

# தொல்கார்த்திகைத் திருநாள்

பூசை.ச.ஆட்சிலிங்கம்
புலவர். அருள்மிகு கபாலீச்சரம்


தமிழர் தம் தொன்மைமிகுந்த விழாக்களில் முதன்மை பெற்றது கார்த்திகை விளக்கீடு ஆகும். இது இல்லங்களிலும் கோயில்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இந்நாளில் மலை உச்சியில் விளக்குகளை ஏற்றி வைத்து வழிபடுவர் மாலை வேளையில் மலையின் மீது ஏற்றப்பட்ட விளக்கைப் பார்த்து வணங்கிய பின்னரே உணவு உண்பது வழக்கம்

குறிப்பாக பெண்கள் புத்தாடை புனைந்து பூச்சூடி மகிழ்வுடன் விளக்குகளை ஏற்றி வழிபடுவர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் காதல் இலக்கியமான அகநானூற்றில் வெப்பம் மிகுந்த பாலைநிலத்தில் சிவப்புவண்ண இலவம்பூக்கள் மலர்ந்திருப்பது மகளிர் பலரும் மகிழ்ந்து கூடி நீண்ட வரிசைவரிசையாக அடுத்தடுத்து ஏற்றிவைத்த விளக்குகள் போலுள்ளது என்று வர்ணிக்கப்படுகிறது. இதன்மூலம் அது பெண்களுக்குரிய விழா என்பதை அறிகிறோம். திருஞானசம்பந்தர் தொல்கார்த்திகை என்றும், தளத்தேந்தி இளமுலைத்தையலர்கள் கொண்டாடும் என்று கூறுவது காண்க. இதன் மூலம் பழமையும், பெண்களுக்கே உரியது என்பதும் வலியுறுத்தப் படுவதைக் காண்கிறோம். கால வெள்ளத்தில் பல்வேறு விழாக்கள் தன் உருவமும் கொண்டாடப்படும் நாளும் மாறி விளங்குவதைக் காண்கிறோம். எடுத்துக் காட்டாக தைநீராடல் எனும் பாவை நோன்பு மார்கழி மாதம் பௌர்ணமியில் தொடங்கி நடைபெற்று வந்தது இப்போது அது மார்கழி முதல் தேதிக்கு வந்துவிட்டதைக் காண்கிறோம். அப்படியின்றி இவ்விழா தோன்றிய காலம் தொட்டு கார்த்திகை மாதப் பௌர்ணமியும், கிருத்திகை நட்சத்திரமும் கூடிய நாளில் இவ்விழா நடைபெற்று வருவதைக்காண்கிறோம்.

நக்கீரர் இதனை மதிநிறைந்து (முழுநிலவுநாளில்) அறு மீன்சேரும் (கார்த்திகை நட்சத்திரம் கூடிவரும்) அகல் இருள் நடுநாள் என்று குறிப்பிடுவதால் அறியலாம்.

பாலை பாடிய பெருங்கடுங்கோ கார்த்திகை மாதத்தை அறுமீன்பயந்த அறஞ்செய் திங்கள் என்றும் கார்த்திகை விழாவை பெருவிழா என்றும் குறிக்கின்றார்..



''கல்யாணமும் கார்த்திகையுமாய்'' என்பது பழமொழி, புதுமணத்தம்பதிகளை கார்த்திகைக்கு அழைத்து சீராட்டி அனுப்புவதே வழக்கம் (இப்போது அதுவே தலை தீபாவளியாய் மாறியுள்ளது)

தமிழகம் முழுவதும் இவ்விழா கொண்டாடப்பட்டாலும் திருவண்ணாமலையில் சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகிறது. பெருங்கடுக்கோ, அருவியான்ற உயர்சிமை மருங்கிற் பெருவிழா விளக்கம் என்று இவ்விழாவை சிறப்பிக்கின்றார். அனைத்து மலைகளிலும் அருவிகள் பாய்ந்தாலும் அண்ணாமலைக்கு தனி சிறப்புண்டு, அங்கு உச்சியில் சோனை நதிஎன்ற அருவி தொடங்கி வழிந்து குதித்தோடியது. அதை இன்று காணமுடியாவிட்டாலும் அது ஓடிய சுவட்டைக் காண்கிறோம்.

திருஞானசம்பந்தர் அருவித்திரள் அண்ணாமலை என்று கூறுவதைக் காண்கிறோம்.

முத்தொள்ளாயிரத்தில் ஆபுகும் மாலை அணிமலையில் தீயேபோல் என்ற உவமை காணப்படுகிறது. இங்கு அணிமலை என்பது அண்ணாமலை என்றும் அதன்மீது இட்ட தீ என்பது அண்ணாமலையார் தீபத்தையும் குறிக்கும் என்பர்.

கார்த்திகை நட்சத்திரத்தை எரி என்பர். எரி என்பது அக்னி. அக்னி மயமாக விளங்கும் ஆண்டவனைப் போற்றி வழிபடுவதற்கு உரியநாளாகும்

ஒரு காலத்தில் அண்ணாமலை பெரிய நெருப்பு மலையாகவே விளங்கியது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இறைவன் இங்கே நெருப்புமலையாக நின்றான் என்றும் அவனது அடியைக்காண திருமாலும் முடியைக் காண பிரமனும் முறையே பன்றியாயும், அன்னப் பறவையாயும் உருக்கொண்டு சென்றனர் என்றும் அவர்கள் பலயுகங்கள் முயன்றும் காண முடியாது தோற்றனர் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

திருவண்ணாமலையில் அடிமுடிகாணாத ஆலயம் என்ற பெயரில் ஒரு சந்நிதி உள்ளது. அங்கு இடம்பெற்றுள்ள திருவுருவத்தில் மலை அதற்கு முன்புறம் இடபத்துடன் உண்ணாமலையம்மன் உடனாய அண்ணாமலையார் இருக்க அருகில் பிரமனும் திருமாலும் காட்டப்பட்டுள்ளனர். இது ஐதீகக் காட்சி சிற்பமாகும். தீபத்திருநாளில் இதன் உச்சியில் விளக்கேற்றி வழிபடுகின்றனர். (இதே போன்ற மற்றோர் ஆலயம் ஈசான திக்கிலும் உள்ளது).

திருவண்ணாமலையில் அக்னி மண்டலத்தின் நடுவே பெருமான் ஆனந்த நடனமாடினார் உமையவளை ஒரு பாகம் கொண்டு அர்த்தநாரீசுவரராக அவர் ஆடிய ஆட்டம் இப்போதும் நிகழ்கிறது. திருவண்ணாமலையில் மலைமீது தீபம் ஏற்றும் வேளையில் கொடிமரத்தின் அருகில் பஞ்சமூர்த்திகளுக்கு எதிரில் அர்த்தநாரீசுவர நடனம் நிகழ்கிறது. அதுவே காணவேண்டிய காட்சியாகும் சுற்றிலும் தீப்பந்தங்கள் ஒளிவீச பெருமான் அதன் நடுவே ஆடுகின்றான்.

பெண்களை ஒளிவிளக்குகள் என்றும் குலவிளக்குகள் என்றும் கூறுவர். திருவிளக்கு நாளில் பெண்மைக்கு ஏற்றம் தரும் வகையில் அர்த்தநாரியாகப் பெண்ணை ஒரு பாகம் கொண்டு பெருமான் ஆடல் புரிகிறான் என்பர்.

கார்த்திகை தீபம் நான்கு நாட்கள் நடைபெறுவதாகும். முதல்நாள் கார்த்திகை நட்சத்திரத்தன்று கொண்டாடப்படும். அது அண்ணாமலையார் தீபம் எனப்படும். அன்று மலைமீது தீபம் ஏற்றப்படும். பெரிய சிவாலயங்களில் சொக்கப்பனை கொளுத்தி எரியின் வடிவமாக இறைவனை வழிபடுவர் அன்று பஞ்சமூர்த்திகள் வீதியுலா நடைபெறும்


இரண்டாம் நாள் விஷ்ணுதீபம் எனப்படும். இது ரோகிணியன்று ஏற்றப்படும். அனைத்து விஷ்ணு ஆலயங்களிலும் இது கொண்டாடப்படும்.

மூன்றாம் நாள் நாட்டு கார்த்திகை எனப்படும். அன்று திருமணமாகிச் சென்ற பெண்களை கணவருடன் அழைத்து விருந்து வைத்து புத்தாடைகள் அளிப்பர். சீர்செய்வர்.

நான்காம் நாள் தோட்ட கார்த்திகை என்பர். அன்று வயல்களிலும் தோட்டங்களிலும் விளக்குகளை ஏற்றிவைப்பர். இல்லுறை தெய்வங்களுக்கும் குல தெய்வங்களுக்கும் படையலிடுவர்.

சமண, பௌத்த ஆலயங்களில் கூட கார்த்திகை தீபவிழா தனிச்சிறப்புடன் கொண்டாடப்படுகிறது.

இந்த இனிய கார்த்திகை தீபதிருநாளில் ஜோதி வடிவான இறைவனை வழிபட்டு இறையருள் பெறுவோம்.




# ''ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு''

''ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு'' எனச் சான்றோர்கள் அனைவரும், பல்வேறு காலங்களில் பல்வேறு நாடுகளில். அவ்வப்போது தோன்றி அறிவுறுத்தியுள்ளனர். தெய்வ நம்பிக்கையும். தெய்வச் சிந்தனையும், மக்களை யெல்லாம் உய்வித்து உயர்விக்கும் என்பது சான்றோர்கள் அனைவரும் தகவுறக் கண்ட துணிபு (1)

இறைவன் ஒருவன் உள்ளமையினைத் தொன்று தொட்டு வாழையடி வாழை என வந்துள்ள சான்றோர்கள் பலரும், ஒவ்வோராற்றால் நம்மனோர்க்குத் தெளிவுறக் கூறிவற்புறுத்தியுள்ளனர்.

**தொல்காப்பியர்**

*(1)* ஆசிரியர் தொல்காப்பியனார் தம் நூலில் **''பாங்கருஞ்சிறப்பிற் பல்லாற்றானும், நில்லா உலகம் புல்லிய நெறித்தே''** எனக் காஞ்சித் திணையால் உலக நிலையாமை கூறித் தெய்வந் தெளிவித்தருள்கின்றார்.



மேலும்,

**''வினையின் நீங்கி விளங்கிய அறிவின்**

**முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்''**

எனவரும் நூற்பாவில், **''வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்''** என்னும் தொடரினால், இறைவன் நம்மைப்போல் வினைவயப்பட்டுக் கட்டுப்பட்டு நிற்பவன் அல்லன், அவன் பேரறிவு வடிவினன் எல்லாவற்றிற்கும் எல்லோருக்கும் முற்பட்டு முதற்பெரும் பொருளாக விளங்குபவன், என்பன போன்ற தெய்வ இலக்கணங்களைப் புலப்படுத்தியுள்ளார். அன்றியும்.

**''வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்**

**பழிதீர் செல்வமொடு வழிவழிச் சிறந்து**

**பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே''**

என்னும் நூற்பாவினால், தெய்வ வழிபாடு தேவை என்றும், நாம் வழிபடும் தெய்வம் நம்மைப் புறங்காத்து நலம்பல விளைத்தருளும் என்றும், அவ்வாற்றல் நாமும் நம்மைச் சார்ந்தோர்களும் பழி தீர் செல்வங்கள் பலபெற்று வழிவழியாக வாழலாம் என்றும், பிறவாறும் தொல்காப்பியர் சுட்டியுரைத்திருத்தல் காணலாம்.

**திருவள்ளுவர்**

*(2)* தெய்வப் புலவர் திருவள்ளுவர், **'எழுத்தெல்லாம் அகரமுதல ஆதல்'** போல, **'உலகு ஆதிபகவன் முதற்று'** எனத் தெய்வமுண்மை தேற்றி, அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பதனை **''வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது''** *(377)* என்று துணிந்து மொழிந்தருள்கின்றார். ஒரு நாட்டின் நலத்திற்கு அரசன் அல்லது தலைவன் ஒருவன் இன்றியமையாமைபோல, உலகின் இயக்கத்திற்கும் ஓர் இறைவன் இன்றியமையாதவனாவான் என்பது திருவள்ளுவர் உணர்த்தும் தெளிந்த முடிவு.

''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்'' (குறள் 388)

''நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல்.'' (குறள் 770)

என்பன போன்ற திருக்குறள்கள் பலவும், திருவள்ளுவரின் தெய்வங்கொள்கை பற்றிய கருத்துக்களைச் செவ்விதின் உணர்த்தும்.

**இளங்கோவடிகள்**

*(3)* செஞ்சொற் காப்பியமாம் சிலப்பதிகாரத்தினை இயற்றியருளிய செந்தமிழ்ச் சான்றோர் ஆகிய இளங்கோவடிகள். அவரவர் செய்த நல்வினை தீவினைகள் அவரவரையடைந்து பயன் கொடுத்தே தீரும் என்னும் உண்மையினை வற்புறுத்தி, **''ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்''** எனச் சுட்டுரைத்து, அவற்றுற் கடவுளுண்மையினை அறிவுறுத்துகின்றார்.

**சீத்தலைச்சாத்தனார்**

*(4)* அணிமிகச் சிறந்த மணிமேகலை என்னும் அரும்பெறற் காப்பியம் பாடிய சீத்தலைச் சாத்தனார். நாம் நம் தாய் தந்தையினை அனுமானத்தினால் மட்டுமே உய்த்துணர்ந்து கொள்ளுகின்றோம். அதுபோலவே உலகத்திற்கும் ஒரு கடவுள் உண்டு என்பதனை அனுமானப் பிரமாணம் கொண்டே கருதியுணர்ந்து கொள்ள வேண்டும் என்னும் கருத்து அமைய,

**''தந்தை தாயரை அனுமானத்தல்லது
இந்த ஞாலத்து எவ்வகை அறிவாய்?
என்னும் வரிகளால் இனிது உணர்த்துகின்றார்.''**

**கணியன் பூங்குன்றனார்**

*(5)* நாம் அறியாவண்ணம் நம்முடைய வாழ்க்கையினை உருவாக்கிக் கொண்டு செல்லுகின்ற ஏதோ ஓர் ஆற்றல் உள்ளது. முறை பிறழாது செயலாற்றி வருதலின், அப்பேராற்றலை முறை என்றே பெயரிட்டு மொழிதலும் தகும். ஒரு தெப்பம் அல்லது புணையானது தனக்கென ஒரு செயலும் இன்றி, நீர் ஓடும் வழியே தானும் ஓடுதல் போன்றே, ஆருயிர்கள் அனைத்தும் தமக்கென ஒரு செயலும் இன்றித் தெய்வ ஆணை ஆகிய ஊழ் என்னும் முறை வழிப்பட்டு இயங்கி நிற்கின்றன. ஞானிகள் அனைவரும் தம் ஞானக் காட்சியினாற் கண்டுணர்ந்து, இவ்வுண்மையினையே'' நமக்கு இனிது விளக்கிப் போந்துள்ளனர் என்று.

**''நீர்வழிப் படுஉம் புணைபோல், ஆருயிர்
முறைவழிப் படுஉம் என்பது, திறவோர்
காட்சியில் தெளிந்தனம்....''**

புணை - தெப்பம் முறை - ஊழ், தெய்வ ஆணி திறவோர்- ஞானிகள் காட்சி - ஞானக்காட்சி, ஞானநூல்கள்.

எனவரும் புறநானூற்றுப் பாடல் வரிகளில், கணியன் பூங்குன்றனார் என்னும் புலவர் பெருமான் நமக்குப் போதித்தருளுகின்றார்.

**மெய்கண்டசிவம்.**

*(6)* சைவ சித்தாந்தஞானப் பேராசிரியர் ஆகிய மெய்கண்டசிவம், காணப்படும் இவ்வுலகம் அவன் அவள் அது என்னும் பாகுபாடுகள் உடையதாயும், பல்வேறு வகைத்தாய்ச் சடமாயும், சுட்டியறியப் படுவதாகும் எனவே **''செய்வோனை இன்றிச் செய்வினை நிகழ்தல் இல்லை''** என்னும் அறிவியல் முடிவிற்கு அமையக் காணப்படும் இவ்வுலகம் காணப்படாத கடவுள் ஒருவரை வேண்டியே நிற்கும். அக்கடவுள் உயிர்களோடு ஒன்றாய் வேறாய் உடனாய் நிற்பர். **'' காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்''** போல அக்கடவுளே உயிர்களுக்கெல்லாம் காணும் உதவியும் செய்து போதருகின்றார் என்பன போன்ற கருத்துக்களைத் தருக்க நெறிமுறைகள் பிறழாது விளக்கிக் காட்டி, இறைவனுண்மையினை நிறுவுகின்றார்.

**''ஒன்றலா ஒன்றால் உளதாகி, நின்றவாறு
ஒன்றலா ஒன்றில் அவை ஈறாதல் ஒன்றலா
ஈறே முதல், அதனின் ஈறலா ஒன்று, பல
வாறே தொழும்பாகும் ஆங்கு''**

என்று வரும் சிவஞானபோத வெண்பா, இறைவனாலேயே உலகம் முத்தொழிற்படுகின்றது என்றும் அதனால் இறைவனே உலகிற்கு முதல்வன் என்றும், உலகிற் பிறந்தும் இறந்தும் உழன்று வரும் உயிர்கள் எல்லாம் பெத்தம், முத்தி என்னும் இருவகை நிலைகளிலும் இறைவனாகிய முதல்வனுக்கு அடிமை (தொழும்பு) யாகற்பாலனவேயாம் என்றும், திறம்பட

விளக்குதல் காணலாம்.

**அருள்நந்திசிவம்**

(7)இவ்வாறே ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரியர். தாம் இயற்றிய சிவஞான சித்தியார் என்னும் சிறந்த சைவ சித்தாந்தப் பெரு நூலில், உலக இயக்கத்திற்குக் காரணமான கடவுள் ஒருவர் உண்டு என்பதனை,

**''ஒருவனோ டொருத்தி ஒன்றென்**
**றுரைந்திடும் உலகம் எல்லாம்**
**வருமுறை வந்து, நின்று**
**போவதும் ஆத லாலே,**
**தருபவன் ஒருவன் வேண்டும்''**

என முடிந்த முடிபாக மொழிந்தருள்கின்றார். மேலும், நம்முடைய உயிரானது நனவு, கனவு உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம்( சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரீயாதீதம்) என்னும் ஐந்துவகை அவத்தை நிலைகளை அடையும் இயல்பின, அத்தன்மையானது, அரசன் ஒருவன் தன் படைகளும் பரிசனங்களும் புடைசூழ வெளியே போந்து பவனி செல்லுதலும், பின்னர்த் தன் அரண்மனைக்குத் திரும்பி அந்தப்புரம் புகுதலும் போன்றதாகும், அவ்அவத்தைகள் முறையே புருவநடு, கழுத்து, இருதயம், கொப்பூழ், மூலம் என்னும் இடங்களில் நிகழும் அவ்அவத்தைகளில் முறையே 35,25,3,2,1 என்னும் தத்துவக் கருவிகள் இயங்கி நிற்கும் என்பன போன்ற எத்துணையோ பலயோக ஞான அனுபவச் செய்திகளைக் கூறுகின்றார்.

**''பூதம் ஆனவை காரியங்கள்,**
**பொலிந்து மன்னி அழிந்திடும்,**
**ஆதலால் ஒரு நாதன் இங்குளன்**
**என்று அறிந்துகொள் ஐயனே!''**

**தாயுமானவர்**

(8) நாம் இறந்து போனால் நம்முடைய பிணத்தை நான்கு பேர்சுமக்க வேண்டியதாக இருக்கின்றது, ஆனால் அவ்வளவு பெரிய சுமை மிக்க உடலைச் சுமை தெரியாமல் நாம் எங்ஙனமோ இப்போது சுமந்து வருகின்றோம். இஃது எத்தனை வியப்பு இது தெய்வத்தின் செயலே யன்றோ?

**''தோற்பாரம் நால் ஆள்**
**சுமை ஆகும், சீவன் ஒன்று இங்கு**
**ஆர்ப்பால் எடுத்தது**
**எவராலே? பராபரமே!''**

என வியந்து வினவித், தாயுமானவர் நம்மைச் சிந்திக்க வைத்துத் தெய்வ மொன்றுண்டு என்னும் மெய்யுணர்வை நமக்கு நல்குகின்றார்.

இம்மட்டோ நாம் தாயின் கருப்பப் பையின் கண்ணே குழந்தையாக, முந்நூறு நாட்கள் (பத்து மாதங்கள்) அடைந்து கிடந்து வளர்ந்து வருகின்றோமே அப்போது நமக்கு அங்கு உண்ண உணவும், பருகத் தண்ணீரும் உயிர்ப்பதற்குக் காற்றும் கொடுத்துதவிக் காப்பாற்றுபவர்கள் யார்? கடவுள் அல்லரோ? அத்தகைய அருட்பெருங் கடவுளை நாம் நினைத்து உணர்ந்து நன்றி பாராட்டுதற்குக் கடமைப் பட்டிருக்கின்றோம் அன்றோ? என்கின்றார் தாயுமானவர்.

**''தாயர் கர்ப்பத்தாடு அன்னமும்**
**தண்ணீரும் தந்தருளும்**
**நேய! உனை யாரே**
**நினையார்? பராபரமே!''**

**இராமலிங்க அடிகள்**

(9)காற்று என்றும் எங்கும் ஒரு நிலையில் நில்லாத இயல்பை யுடையது. ஓரிடத்திலும் நிலைத்து ஒரு கணமேனும் நில்லாமைதான், காற்றின் சிறப்பியற் பண்பு. இத்தகைய காற்றுப் போன்ற உயிரை எத்துணையோ பல எண்ணிறந்த துளைகளையுடைய ஓட்டைக் குடம் போன்ற நம்மனோர் உடலின்கண் புகுத்தி, அவ்வுயிர் ஆகிய காற்று ஓடிவிடாமல் ஒரு குறிப்பிட்ட கால அளவு ஒடுங்கிக் கிடக்கும் வண்ணம், ஒரு பெருஞ்செயற்கருஞ் செயலைச் செய்து வைத்துள்ள மாபெருஞ்சித்தன் யாவனே? கடவுள் என்று அல்லாமல் வேறு எவ்வகையில் அச்சித்தனை நாம் குறிப்பிடுவது?



**''நில்லாத காற்றை**
**நிலையாக் கடத்தடைத்துச்**
**செல்லாது வைத்தருளும்**
**சித்தன் எவன்?''**

என வினவி, இராமலிங்க அடிகளார் தாமும் இறைவன் ஒருவன் உண்மையினை மறுவற நிறுவி யருளுகின்றார்.



இதுகாறும் கூறியவற்றால் தெய்வ நம்பிக்கையும், தெய்வசிந்தனையும், மக்கள் வாழ்க்கைக்கு மிக மிக இன்றியமையாதவை என்பது, வெள்ளிடை யலங்கலாய்த் தெள்ளிடை விலங்கலாய்த் தெள்ளிதிற் புலனாகும். நாம் அனைவரும் தெய்வ வழிபாட்டில் சிறப்புற ஈடுபட்டு, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து உய்ய முயலுவோமாக!

**''ஒன்றென்றிரு! தெய்வம் உண்டு**
**என்றிரு! உயர் செல்வம் எல்லாம்**
**அன்றென்றிரு! பசித்தோர்**
**முகம்பார்! நல் அறமும் நட்பும்**
**நன்றென்றிரு! நடு நீங்காமலே**
**நமக்கு இட்டபடி**
**என்றென்றிரு! மனமே! உனக்கே**
**உபதேசம் இதே''**
- பட்டினத்தார்.



सत्यमेव जयते

EMS SPEED POST

भारतीय डाक
INDIA POST

When we say Speed we mean

SPEED




- Wide network of more than 1300 locations
- Rs.12/- within Corporation/Municipal limits
- Rs.25/- for everywhere
- Online track & trace
- 24 x 7 booking facility
- Special offer for Corporate customers
- Credit facility
- Free pick-up at door step
- Insurance facility
- Contractual service to any place in India


Chennai : 2829 5521; 2859 3079
2233 0664; 2232 1360
Coimbatore : (0422) 254 1208
Madurai : (0452) 252 6398
Trichy : (0431) 246 6228

Principal Chief Postmaster General
Tamil Nadu Circle, Chennai 600 002
www.tamilnadupost.nic.in

Make Mail Machinable

# உருத்திர பசுபதி நாயனார்

- க. சுகுமாரன், மன்னார்குடி



சோழ நாட்டில் திருவாரூர் மாவட்டத்தில் திருத்தலையூர் என்னும் தலம் உள்ளது. மயிலாடுதுறையில் இருந்து பேரளம் செல்லும் வழியில் உள்ள கொல்லுமாங்குடியிலிருந்து கிழக்கே சுமார் ஐந்து கிலோ மீட்டர் சென்றால் காவிரியில் இருந்து பிரிந்து வரும் நாட்டு வாய்க்கால் என்ற ஆற்றை அடையலாம். இந்த நாட்டு வாய்க்காலின் தென்கரையில் திருத்தலையூர் அமைந்துள்ளது. திருத்தலையூரில் வாழ்ந்த மறையவர்கள். தருமமும், நீதியும் வழுவாதவர்கள். இவர்கள் செய்து வந்த வேள்வியினால் மாதம் தவறாமல் திருத்தலையூரில் மழை பெய்து வந்தது.

திருத்தலையூரைச் செழுஞ்சோலைகளால் சூழ்ந்திருக்கும் பசுமை பூத்துக் குலுங்கும் ஊர் என்று புராணம் கூறுகிறது. இன்று கூட அது வளமான கிராமமாகவே இருக்கிறது. இந்த ஊரில் தோன்றியவர் பசுபதி. இவர் யஜுர் வேதத்தில் இருக்கும் உருத்திர மந்திரத்தை தூய இதயத்துடன் தொடர்ந்து ஓதி வந்தார். இதனால் உருத்திர பசுபதி என்ற பெயரைப் பெற்றார்.

உருத்திர பசுபதியார் நாள்தோறும் திருத்தலையூரில் இருக்கும் தாமரைக் குளத்திற்குச் செல்வார். கழுத்தளவு நீரில் நின்று கொண்டு உருத்திர மந்திரத்தை ஓதிக் கொண்டே இருப்பார். அப்போது அவர் கைகள் தலைக்கு மேல் உயர்த்தி இறைவனை கும்பிட்ட வண்ணம் இருக்கும். சிவபெருமான் திருவடிகளை நினைத்து அவர் இரவும் பகலும் இடைவிடாமல் கழுத்தளவு நீரில் நின்று உருத்திர மந்திரத்தைத் தொடர்ந்து ஓதிக்கொண்டே இருந்தார். அதன் பயனால் இவருடைய மனம் ஒருமுகப்பட்டு உயர்ந்தது.

உருத்திர பசுபதியார் உருத்திர மந்திர ஜபத்தாலும், தவத்தாலும் மேன்மை பெற்றவர். இடைவிடாது கழுத்தளவு நீரில் நின்று உருத்திர மந்திரத்தை ஓதி வந்ததால், சிவபெருமானின் கருணைக்குப் பாத்திரமானார்.

இறைவனின் தூக்கிய திருவடியின் கீழே இருக்கும் பெரும் பேற்றையும் பெற்றார். உருத்திர பசுபதியார் நாயனார் ஆனார். மற்ற நாயன்மார்களுக்கும் இவருக்கும் பெரும் வேறுபாடு இருக்கிறது. மற்ற நாயன்மார்கள் உயிர்களுக்குப் பணி செய்வதிலும், ஆலய வழிபாட்டிலும் ஈடுபட்டவர்கள். மக்கள் மத்தியில் சமண மதத்தின் தாக்கத்தால் மறைந்து வந்த கடவுள் பக்தியை மீண்டும் நிலைநிறுத்தியவர்கள்.

உருத்திர பசுபதியார் தாமரைக் குளத்தில் கழுத்தளவு நீரில் நின்று மந்திர யோகத்தில் ஈடுபட்டு உயர்ந்தவர். சிவ பெருமானின் அருளுக்குப் பாத்திரமானவர்.

திருத்தலையூரில் அவர் மந்திர யோகம் செய்த திருக்குளம் இப்போதும் இருக்கிறது.

உருத்திர பசுபதி நாயனார் சிவப்பேறு பெற்ற திருவிழா இவ்வூரில் கொண்டாடப்பட்டு வருகிறது. இங்குள்ள சிவ ஆலயத்தில் உருத்திராபதி நாயனாரின் பழைய திருவுருவம் இருக்கிறது. உருத்திரபசுபதி நாயனார் மடம் ஒன்றும் திருத்தலையூரில் உள்ளது.

உருத்திர பசுபதி நாயனார் பெற்ற கடவுள் அனுபவத்தைப் பற்றி சேக்கிழார் பெருமான்

**"அருமறைப் பயன் ஆகிய உருத்திரம் அதனை**
**வரும் முறைப் பெரும்பகலும் எல்லியும் வழுவாமே**
**திருமலர்ப் பொகுட்டு இருந்தவன் அணையவர், சிலநாள்**
**ஒருமை உய்த்திட, உமை இடம் மகிழ்ந்தவர் உவந்தார்.**
**நீடும் அன்பினில் உருத்திரம் ஓதிய நிலையால்**
**ஆடுசேவடி அருகுகூற அணைந்தனர், அவர்க்குப்**
**பாடு பெற்ற சீர் உருத்திர பசுபதியார் ஆம்**
**கூடுநாமமும் நிகழ்ந்தது குவலயம் போற்ற!"**

என்று பாடிப் பரவியிருக்கிறார்.

யஜுர் வேதத்தில் சொல்லியிருக்கும் உருத்திர மந்திரத்தைக் கழுத்தளவு நீரில் நின்று ஓதியே, உருத்திர புசுபதியார் என்ற பெயரும், இறைவன் திருவடியின் கீழ் என்றும் இருக்கும் பேற்றையும் பெற்றார். இரவும் பகலும் இடைவிடாமல் உருத்திர மந்திரத்தை ஓதி வந்ததால் சிவ யோகத்தில் ஈடுபட்ட திருமாலைப் போல உயர்ந்தார். சரியை, கிரியை, யோகம் என்ற மூன்றில் மூன்றாவதான யோகத்தின் மூலம் சிவப் பேற்றை பெற்றவர் உருத்திர பசுபதியார். அதிலும் மந்திர யோகத்தினால் வெற்றி பெற்றவர்.

சேக்கிழாரும் திருஞான சம்பந்தரைப் பற்றி பேசும் போது தெரிவித்திருக்கிறார். வேதநெறி தழைத்து ஓங்க, மிக சைவத்துறை விளங்க...குமுதவாய் மலர்ந்து அழுதார் என்று சொல்லுகிறார். இதில் வேத நெறிக்கும், அதை விடச் சிறந்த சைவ நெறிக்கும் இருக்கும் பெரும் வேறுபாட்டை பற்றி புரிந்து கொள்ள வேண்டும்.

உருத்திரன் என்ற இறைவனின் திருநாமத்துக்கு உயிர்களின் அச்சத்தையும் அதனால் ஏற்படும் துன்பத்தையும் நீக்குபவன் என்பது தான் நேரான பொருள். உருத்திரன் என்ற மந்திரத்தின் பொருளும் பயத்தினால் ஏற்படும் துன்பத்தை நீக்கும் இறைவனைப் போற்றி வணங்குவது என்பது தான். உலகத்தில் உள்ள அசையும் பொருள், அசையாப் பொருள் எல்லாவற்றிலும் நீக்கம் அற நிறைந்து இருக்கிறான் இறைவன்.

இந்த உண்மையை வேதம் சொல்வது போலவே. அப்பர் பெருமானும் சொல்லுகிறார்.

**மண் ஆகி, விண் ஆகி, மலையும் ஆகி**
**வயிரம் ஆய் மாணிக்கம் தானே ஆகி**
**கண் ஆகி, கண்ணுக்கு ஓர் மணியும் ஆகி**
**கலை ஆகி, கலைஞானம் தானே ஆகி**
**பெண் ஆகி, பெண்ணுக்கு ஓர் ஆணும் ஆகி**
**பிரளயத்துக்கு அப்பால் ஓர் அண்டம் ஆகி**
**எண் ஆகி, எண்ணுக்கு ஓர் எழுத்தும் ஆகி**
**எழும் சுடராய் எம் அடிகள் நின்ற ஆறே!**

என்பது அடிகளின் திருவாக்கு.

இறைவன் நிலமாகவும், வானமாகவும், மலையாகவும், வைரம் மாணிக்கம் முதலிய மணிகளாகவும் விளங்குகிறான். கண்ணாகவும், கண்ணுக்கு ஒளிதரும் மணி ஆகவும், கலையாகவும், கலைக்கு உரிய ஞானமாகவும் இறைவன் தோன்றுகிறான். பெண் ஆகவும், பெண்ணுக்கு உரிய ஓர் ஆண் ஆகவும், பிரளயமாகவும், பிரளய காலத்து மாற்றங்களாகவும் இறைவன் காட்சி தருகிறான். எல்லாப் பொருள்களையும் எண்ணிப்பார்க்கிற எண்கள் ஆகவும், அந்த எண்களின் கருத்துகளை விளக்குகின்ற எழுத்துகளாகவும், எழுந்த ஜோதி மயமாக விளங்கிக் கொண்டும், எல்லாப் பொருள்களிலும் துலங்கிக் கொண்டும், எல்லாருக்கும் அறிவை வழங்கிக் கொண்டும் நிலையாக நின்று கொண்டு இருக்கும் இறைவனை வணங்குகிறேன். இதுதான் மேலே இருக்கும் செய்யுளின் பொருள். இந்தப் பொருள்களுடன் கூடிய சமஸ்கிருத சொற்களால் இறைவனைப் போற்றுவது தான் உருத்திர மந்திரம்.

திரு உருத்திர மந்திரத்தை வள்ளலாரும் ஓதி ஓதி உயர்ந்திருக்கிறார். அவர் ஓதி இருப்பதைப் பாருங்கள்.

**"உலகநிலை முழுதாகி, ஆங்கு ஆங்கு உள்ள**
**உயிராகி, உயிர்க்கு உயிர்ஆம் ஒளிதான் ஆகி,**
**கலகநிலை அறியாத காட்சி ஆகி,**
**கதி ஆகி, மெய்ஞானக் கண்அது ஆகி,**
**இலகு சித்ஆகாசம் அது ஆய், பரம ஆகாச**
**இயல்பு ஆகி, இணை ஒன்றும் இல்லாது ஆகி,**
**அலகில் அறிவு ஆனந்தம் ஆகி, சச்சி**
**தானந்தம் ஆகி அமர்ந்த தேவே!"**


என்று மகாதேவ மாலையில் வள்ளலார் எண்ணூறு வரிகளில் ஆயிரக் கணக்கில் உருத்திர மந்திரத்தை தமிழ் மந்திரச் சொற்களைக் கொண்டு ஓதுகிறார். உலக நிலை முழுவதுமாகி நிற்கின்ற ஆண்டவரே போற்றி. ஆங்கு ஆங்கு வாழ்கிற உயிர்களாகவும், அந்த உயிர்களை வாழும்படி அருள்புரிந்து கொண்டு இருக்கும் உயிருக்குள் உயிராக விளங்கும் ஒளிச் சுடரே போற்றி. சிறிதும் கலக்கத்துக்கு இடமில்லாத காட்சியாகவும், இயக்கம் ஆகவும், மெய்ஞானக் கண் ஆகவும் விளங்குகிற கடவுளே போற்றி. எங்கும் நிறைந்து விளங்க வைக்கும் அறிவு ஒளி மிகுந்த ஆகாசமாகவும், அதற்கு மேல் இருக்கும் தெய்வ ஆகாசத்தின் தன்மையாகவும் விளங்குகின்ற பரம்பொருளே போற்றி, அளந்து அறிய முடியாத ஆனந்தம் ஆகி, சத்து, சித்து, ஆனந்தம் என்கிற உண்மை அறிவின் இன்பமும் ஆகி எழுந்தருளி இருக்கும் தேவ தேவனே போற்றி. இவ்வாறு வள்ளலார் சமஸ்கிருதத்தில் இருக்கும் திரு உருத்திர மந்திரத்திற்கு இணையாக தமிழிலே திருஉருத்திர மந்திரத்தை ஓதி ஓதி இன்புற்று இருக்கிறார்.

அப்பரும், வள்ளலாரும் திரு உருத்திர மந்திரத்தை ஓதும்போது இறைவன் ஜோதி மயமானவன் என்பதை உணர்த்துகிறார்கள். வேதத்தில் இருக்கும் உருத்திர மந்திரத்திலும் ஜோதியாகவே இறைவன் வணங்கப்படுகிறான். சோம, சூரிய அக்னியாகவே வணங்கப்படுகிறான். வள்ளலார் இந்த மூன்று ஜோதிகளுக்கும் ஜோதியைக் கொடுத்து இயக்குகின்றவனே இறைவன் என்பதை **"முச்சுடர்களும் ஒளி முயங்கு உற அளித்து அருள் அச்சுடராம் பதி அருட்பெரும் ஜோதி!"** என்று வேத வாக்கியங்களை தமிழிலே சொல்லிப் போற்றி இருக்கிறார்.

உருத்திர மந்திரத்தை உருத்திர பசுபதியார் கழுத்தளவு தண்ணீரில் நின்று கொண்டு ஏன் ஜபித்தார்? எப்படி ஜபித்தார்? உருத்திர மந்திரத்தை தொடர்ந்து இரவு பகல் என்று பாராமல் ஜபிக்கும் போது உடம்பு தாங்க முடியாத உஷ்ணத்தால் பாதிக்கப்பட்டு விடும். தம் உடம்பு உஷ்ணத்தால் பாதிக்கப்பட்டால் தம்முடைய உருத்திர ஜபதவம் நிறைவேறாமல் போய்விடும் என்பதை பசுபதியார் தம் அனுபவத்தில் உணர்ந்திருந்தார். அதனால் கழுத்தளவு நீரில் இருந்து இறைவனின் அருளைப் பெறும் வரையில் இரவு பகல் என்று பாராமல் தொடர்ந்து உருத்திர ஜபதவத்தைப் புரிந்து வந்தார். இறைவனின் திரு அருளுக்குப் பாத்திரமானார். பசு என்றால் உயிர் என்று பொருள். பதிஎன்றால் தலைவன் என்று பொருள். பசுபதி என்றால் உலக உயிர்களுக்கெல்லாம் தலைவர். உருத்திர பசுபதி என்றால் உயிர்களுக்கு ஏற்படும் பயத்தினால் உண்டாகும் துன்பங்களை தீர்த்து அவைகளுக்கு இன்பம் அளித்துக் கொண்டிருப்பவர் என்று பொருள்.

வாழ்க உருத்திர பசுபதி நாயனார் திருநாமம்!


**திருக்கோயில்**
**திங்கள் இதழ்**



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ 10/ |
| ஓராண்டுச்சந்தா | ரூ 120/ |
| ஐந்து ஆண்டுச் சந்தா | ரூ. 500/ |
| பத்து ஆண்டுச்சந்தா | ரூ 1000/ |
| ஆயுட்காலச்சந்தா | ரூ 1500/ |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

**"திருக்கோயில்" இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!**


**திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :**

| | |
|---|---|
| 1. பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ 15,000/ |
| 2. முன்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 10.000/ |
| 3. பின்பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்) | ரூ 7,500/ |
| 4. உள்புறம் முழுப்பக்கம் | ரூ 5,000/ |
| 5. உள்புறம் அரைப்பக்கம் | ரூ 3,000/ |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

# உலகம் உய்ய உதித்த உடையவர்

பெ.ராமநாதபிள்ளை,
செயல் அலுவலர்,
திருமூர்த்திமலை உடுமலை வட்டம்.



இராமானுஜர் சன்னியாசம் வாங்கிக் கொண்டு, காஞ்சி மாநகரில் தங்கி வாழ்ந்து வரும் காலத்தில், ஸ்ரீரங்கத்தில் ஆளவந்தாரின் சீடர்கள் அனைவரும் ஒன்று கூடி, அளவிடமுடியாத பெருமை பொருந்திய பெரிய பெருமாள் சந்நிதியில் சென்று, வணங்கி, பெருமாளே ஸ்ரீராமானுஜர் சன்னியாசம் வாங்கிக் கொண்டு, காஞ்சியிலே வாழ்ந்து வருகிறார். வைஷ்ணவ தரிசனத்துக்கு உயர்ந்த தலைவர் ஸ்ரீராமானுஜர் தான் என குருநாதர் ஆளவந்தார் அடையாளம் காட்டிவிட்டு சென்றிருக்கிறார். எனவே நீர், அவரை விரைவில் ஸ்ரீரங்கம் வரச்செய்து, இத்தலத்துக்குத் தலைவராக்கி எங்களோடு சேர்ந்து வாழ அருள்புரிய வேண்டும் என மனமார வேண்டினார்கள்.

உத்தமமான பாகவதர்கள் பூமியிலே விழுந்து வணங்கித் தெரிவிக்க, நீலமேகவண்ணனாகிய, திருவரங்கத்துப் பெருமாளும் இளையாழ்வாராகிய ஸ்ரீராமானுஜர் ஸ்ரீரங்கத்திற்கு சீக்கிரத்தில் வரும் படியாக ஸ்ரீமுகம் கொடுத்து, இருவரை அனுப்பி வைத்தார். ஸ்ரீமுகம் கொண்டு சென்றவர்கள் இராமானுஜரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, ஸ்ரீரங்கநாதர் கொடுத்தனுப்பிய ஸ்ரீ முகத்தை அவரிடம் கொடுத்தார்கள்.

ஸ்ரீராமானுஜரும் அதனை பணிவுடன் பெற்றுக் கொண்டு, படித்து பார்த்துவிட்டு, அதில் ஸ்ரீரங்கத்திற்கு வருமாறு அரங்கர் தம்மை அழைத்த செய்தியை அறிந்து பின்னர் காஞ்சி வரதராஜ பெருமானிடம் சென்று திருஉள்ளத்தின் கருத்து என்ன என்பதை அறிய வேண்டுமென்று ஒப்பற்ற பெருமையுடைய திருக்கச்சி நம்பியாரிடம் சென்று தெரிவிக்கவும், திருக்கச்சி நம்பிகளும் ஸ்ரீ காஞ்சி வரதராஜப்பெருமாளிடம் ஸ்ரீ ராமானுஜர் தனக்கு வேண்டும் என அரங்கர் அழைப்பு விடுத்துள்ளார் தங்கள் திருஉள்ளம் அறிய விரும்புகிறேன் என சொல்லவும், ஸ்ரீகாஞ்சி வரதராஜ பெருமாளும் இதனை விட்டுவிடும் என ஸ்ரீராமானுஜரை ஸ்ரீ காஞ்சிபுரத்திலிருந்து ஸ்ரீரங்கம் செல்ல அனுமதி மறுத்து பதில் சொன்னார். அப்பதிலை அப்படியே திருக்கச்சி நம்பிகள் ராமானுஜரிடம் தெரிவிக்கவும். அது கேட்ட ராமானுஜரும் ஸ்ரீமுகம் கொண்டுவந்தவர்களிடம் அடியேன் நீசன் நான் என் செய்வேன் திருவரங்கனிடம் இதை தெரிவியுங்கள் என தெரிவிக்கவும், ஸ்ரீ முகம். கொண்டு சென்றவர்கள் மீண்டும் ஸ்ரீரங்கம் அடைந்து, நடந்ததையெல்லாம்

நம் பெருமாளிடம் ஒப்புவித்தனர்.

உடனே, ஸ்ரீரங்கத்து அம்மான் திருவரங்கத்துப் பெருமாளரையரை அழைத்து இளையாழ்வாராகிய ஸ்ரீ ராமானுஜரை, ஸ்ரீ காஞ்சிவரதராஜப்பெருமாள் கேட்டால் தரமாட்டார். எனவே நீர் காஞ்சிபுரம் சென்று, வரதராஜரை இனிமையுடன் பாடி, அவரின் இசைவு பெற்று கவனமுடன் இளையாழ்வாரை அழைத்து வருவீராக என அரங்கர் திருவாய் மலர்ந்து அருளினார்.

**"சீரார் ஆழ்வார் திருவரங்கப் பெருமாள்**
**அரையர்தமைக் கூவி**
**ஏரார் கச்சி அருளாளர் இளையாழ்**
**வாரையாம் கேட்டால்**
**தாரார் நீயிர் போயவரைச் சந்தோடு**
**இசைக்கும்படி பாடிப்**
**பூரா யத்தால் கொணர்மினெனப் பூவை**
**வண்ணர் எனத் தோன்றும்."**
**ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல் 225.**

திருவரங்கப் பெருமாளரையர் என்ற மஹான் ஸ்ரீராமானுஜர் அவதரித்த கி.பி1017க்கு இணையான பிங்கள வருஷம், வைகாசி, கேட்டை நட்சத்திரத்தில் அவதரித்தார். ஆளவந்தாருக்கும் ஸ்ரீரெங்கநாச்சியாருக்கும் முதல் குமாரராய் சங்குகர்ணர் என்னும் நித்யசூரியின் அம்சமாய் ஸ்ரீரெங்கநாதன் கருணையால் அவதரித்தார்.

அரையரும் அரங்கரை வணங்கி ஸ்ரீரெங்கத்திலிருந்து புறப்பட்டு ஸ்ரீகாஞ்சி மாநகரை அடைந்து, பேரருளாளரான வரதராஜ பெருமாளை மனமார வணங்கி, சிலநாள் அங்கே தங்கி இருந்தார். ஒருநாள் காஞ்சி வரதராஜ பெருமாள் அரையரை வருக என அழைத்து மிக்க தவம் செய்து உயர்ந்தவரே பாடுவீராக என அருளினார்.

அரையரும், மண்ணும், கல்லும், மரங்களும், புற்களும் உருக, பிரம்மா, சிவன் உருக, இந்திரனும் உருக, கண்களில் ஆனந்த கண்ணீர் அருவி போன்று பொழிய எல்லா ராகங்களிலும் இனிதே பாடினார்.

**"மண்ணெலாம் உருகக் கல்லெலாம்**
**உருக மரங்களும் புற்களும் உருக**
**விண்ணெலாம் நிறைந்த அமரரும் உருக**
**விரிஞ்சனும் நக்கனும் உருக**
**கண்ணெலாம் அருவிபாய இந்திரன்**
**கனலுறு மெழு கெனக் கரையப்**
**பண்ணெலாம் எடுத்துப் பாடினார்**
**இனிதாய்ப் பங்கயக் கண்ணனும்**
**மகிழ்ந்தான்."**
**ஸ்ரீராமனுஜ வைபவம் பாடல் 228**

உலகளந்த பெருமாளின் முன் நின்று அவரின் திருவுள்ளம் மகிழும்படியாகப் பாடிய அரையருக்கு ஆடை, ஆபரணங்கள் எல்லாவற்றையும் பெருமாள் அளித்தார். அரையரோ அதனை ஏற்காமல் செந்தாமரை கண்களுடைய எம், பாதுகாவலரே திருச்செவிச்சாத்துவீராம் என சொல்லிவிட்டு பெருமாளே, ஒரு அரசனை ஒரு கவிஞர் புகழ்ந்து பாடினால் அவன் மகிழ்ச்சி அடைந்து, உமக்கு வேண்டுவது என்னென்ன என்று வினவி அவர் விரும்பியதைக் கொடுப்பார், ஆனால் நீரோ என்தேவை என்ன என்று கேட்காமலே, ஏனோ தானோ என்று பாடியவருக்கு மகிழ்ச்சி அடையாதவர்கள் தருவது போலத் தந்தீர் என அரையர் பெருமாளிடம் தெரிவிக்கவும், பெருமாளும் உயர்ந்தவரே நீர் சொல்வது நியாயம். தவறு என்னுடையதுதான், அவற்றைப் பொறுத்து கொள்வீராக என்று கூறி மேலும், திருமகள், பூமிதேவி இவர்கள் இருவரைத் தவிர, நீர் எந்த பொருள் கேட்டாலும் அதனை உடனே நாம் தருவோம் இதில் துளியும் சந்தேகம் இல்லை, என்ன வேண்டுமோ அதைச் சொல்வீராக என மொழிந்தார்.

**"செங்கண்நா யகனார் அறிந்தறி**
**யார்போல் சீரியபுலவனை நோக்கித்**
**தங்கிய புகழாய் ஒக்குமின்(று) எம்பால்**
**தப்புள அவை பொறுத்திடுக**
**பொங்கு பூங்குழலாள் திருமகள்**
**பூமியன்றியெப் பொருளை நீகேட்பாய்**
**அங்கவை உடன் நாம் அளிப்பதற்(கு)**
**ஐயம் இல்லை ஏது அறையென**
**அறைந்தார்."**
**ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல் 231**

உடனே அரையரும் அப்படியானால் இளையாழ்வாரை அடியேனுக்கு அருள்வீராக என வணங்கி வேண்டினார். காஞ்சி அருளாளராகிய ஸ்ரீ காஞ்சி வரதராஜப் பெருமாள் அங்கும் இங்கும் திரும்பி பார்த்து மனம் மிகவும் வருந்தித் தந்தோம் என்றார்.

**"ஆனால் இந்த இளையாழ்வார் தம்மை**
**அடியேற்(கு) அருளென்னத்**
**தேனார் கமலத் தாள் தொழுதார் அரையர்**
**திருமால் அங்கிங்குத்**
**தானாய் இருந்து மிகச் சலித்துத் தந்தோம்**
**என்றார் இருவர்களும்**
**போனார் சிவிகை மேற்கொண்டப் பூவை**
**வண்ணன் கழல் வணங்கி."**
**ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல் 232.**

அரையரும், மிகவும் மகிழ்ச்சி அடைந்து காஞ்சி அருளாளருக்கு நன்றி தெரிவித்துவிட்டு, ஸ்ரீராமானுஜருடன்

பல்லக்கில் ஏறி காஞ்சியிலிருந்து புறப்பட்டார்கள்.

ஸ்ரீராமானுஜருடன் அரையர் திருவரங்கம் வருகிறார் என்ற செய்தியைத் தெரிவிக்க ஒரு தூதுவனை முன்னதாக அரையர்அனுப்பிவைத்தார்.

ஸ்ரீரங்கம் நோக்கித் திருவரங்கத்துப் பெருமாளரையரும், ஸ்ரீராமானுஜரும் வந்து கொண்டு இருப்பதை அறிந்து அவர்களை எதிர் கொண்டு அழைக்க ஸ்ரீஅரங்கத்து அம்மானாகிய நம்பெருமாள் சேனை முதலியாரிடம் இன்று அரையர் இராமானுஜரை அழைத்து கொண்டு ஸ்ரீரங்கம் வருகிறார். அவருக்கு எதிரே நீர் பரிவாரங்களை அழைத்து வரிசையாக நிறுத்தி எதிர் கொண்டு அழையும் - என மொழியவும், சேனை முதலியாரும் அரங்கன் ஆணைப்படி வட திருக்காவேரி ஆறு (கொள்ளிடம்) வரை சென்று ஞானமிக்க இராமானுஜரை எதிர் கொண்டுஅழைத்தார்.

இப்படி இவர்கள் எதிர்கொண்டு அழைக்க, முக்கோல் ஏந்து முனியாகிய யதிராஜரும், அரையரும், கூரத்தாழ்வாரும், உடன்வரக்கூடிய முதலியாண்டாரும், பெருமை மிக்க வடகாவிரியில் நீராடி பரிவட்டமும் (வஸ்திரம்) தரித்து கொண்டு மேலும் கேசவ, நாராயண, மாதவ கோவிந்த, விஷ்ணு, மதுசூதன, திரிவிக்ரம், வாமன, ஸ்ரீதர, ரிஷிகேச, பத்மநாப, தாமாதர என பன்னிரு நாமங்களைச் சொல்லி திருமண் காப்பு அணிந்து தெற்குக் கரையில் தூரியம் முழங்க, கொம்பு, துந்துபி, குடமுழவு முதலிய வாத்தியங்கள் ஒலிக்க பேரிகை, தாளம், மத்தளம், சின்னம் முதலிய வாத்தியங்கள் எதிரே முழங்க, பூமியில் சந்தியாசிகளுக்கெல்லாம் அரசராக விளங்கும் யதிராஜராகிய ஸ்ரீராமானுஜர் சேனை முதலியாரின் திருவடிகளில் மலர்தூவி வணங்கினார் எல்லோரும் இராமானுஜரை தரையில் விழுந்து வணங்கி துதிக்க, பக்தர்கள் பல்லாண்டு பாடினார்கள்.

ஸ்ரீராமானுஜரும் அரங்க பெருமாளின் கோபுரத்தை கண்டவுடனேயே வணங்கி எழுந்து, மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். நெடிய, வலிய, பிராகாரத்தை கண்டார். நீண்ட கைகளைக் கூப்பி கீழே விழுந்து வணங்கி திருக்கோயிலுக்கு உள்ளே செல்லும் முன் வீதிகளில் பிரதட்சிணம் செய்து, ஆச்சாரியன் பெரிய நம்பிகளின் திருவடிகளை வணங்கி, அவரோடும் புறப்பட்டு, திருக்கோயிலுக்குள் சென்று பலிபீடத்தையும் தாண்டி கொடிக் கம்பத்தையும் அதற்குரிய தலங்களில் விழுந்து வணங்கி, அழகிய மணவாளன் மண்டபத்தை அடையவும், எதிர்த்து வந்தவர் எதிர்கொண்டு அழைக்கவும் நம்பெருமாளும் அர்ச்சகர்களின் கைத்தலத்தில் எழுந்தருள ராமானுஜரும், கூரத்தாழ்வாரும், முதலியாண்டாரும். பூமியில் விழுந்து சேவிக்கவும், சொல்லமுடியாத பெருமைமிக்க இராமானுஜரின் தலையின் மீது நம்பெருமாளது தாமரைப்பூப்போன்ற ஒளி பொருந்திய திருவடியினை வைத்தார்கள்.

**"அப்படியே படிமீதச்சுதனைப்படியச்**
**செப்பரும் எம்பெருமானார் வளர் சென்னியின்மேல்**
**தப்பற நம்பெருமாள் வைத்தனர் தாமரைதாள்**
**ஒப்பென அன்றேனவாழ் ஒள்ளிய சேவடியை."**

**ஸ்ரீராமானுஜ வைபவம் பாடல் 251.**

(தொடரும்)

நூல் அறிமுகம்

## கண்கண்ட தெய்வம்

கண்ணொளி தந்து கவலைகள் தீர்க்கும் கடவுளர்கள் - பார்வைக் கோளாறுகளை நிவர்த்தி செய்யும் திருத்தலங்களுக்கு வழிகாட்டுகிறது இந்நூல் என்ற மகுடத்துடன் வெளிவந்திருக்கும் இந்நூல் மயன் அவர்களின் கருத்தோவியமாக மலர்ந்துள்ளது.

உயிர்களின் ஐம்புலன்களில் உயர்ந்த புலன் ''கண் நாம் கண் வழியே உலகின் அற்புதக் காட்சிகளை கண்டு மகிழ்கிறோம். அதனால் கண் தனிச் சிறப்புப் பெற்றுள்ளது. இப்புலன்களில் எளிதில் பாதிப்புக் குள்ளாவதும் கண்ணே. வயது ஏறும் போது கண்ணில் கோளாறுகள் தோன்றுவதும், பார்வை மங்குவதும் மறைவதுமான செயல்கள் நிகழ்கின்றன. விதிவயத்தாலும் வயது மூப்பாலும் ஏற்படும் கண் கோளாறுகளை தெய்வ வழிபாடு எனும் பலத்தால் மாற்றி இன்பமாக இருக்க முடியும் என்று சான்றோர் கண்டனர். கண்ணொளி வழங்கும் பல தலங்களைக் கண்டுபிடித்து சென்று வணங்கி மேன்மை பெற்றனர். இக்காலத்தில் அத்தகைய தலங்களுக்கு வழிகாட்டியாக இந்நூல் ஆசிரியர் அமைத்துள்ளார்.

ஏறத்தாழ முப்பதுக்கும் மேற்பட்ட தலங்கள் இதில் கூறப்பட்டுள்ளன. சைவ, வைணவ, சாக்த, கிராமிய தெய்வக் கோயில்கள் அனைத்தையுமே இதில் தொகுத்து வழங்கியுள்ளார். சிறந்த வழிகாட்டியாகவும் வரலாற்றுப் பின்னணிகளைக் கூறும் பெட்டகமாகவும் இந்நூல் திகழ்கிறது.

# "நாலாயிர திவ்யப் பிரபந்தம்" நூல் வெளியீட்டு விழா



வைணவர்களால் ஐந்தாம் வேதம் என்று கொண்டாடப்படும் ஆழ்வார்களின் அருளிச் செயலான நாலாயிரதிவ்ய பிரபந்தத்திற்கு நயவுரை நம்பி வைணவச் செம்மல் டாக்டர். எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுதிய் உரைவிளக்கத்தின் நான்காம் பதிப்பு வெளிவந்துள்ளது. ஆழ்வார்கள் ஆய்வுமையத்தின் வெளியீடாக மலர்ந்த இந்நூல் மேற்படி மையத்தின் வெள்ளிவிழா ஆண்டில் மலர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நூலில் பாசுரமும் அதற்கு நயம்மிகுந்த நல்லதோர் இனிய உரையும் அதற்கான ஆங்கில மொழிபெயர்ப்பும், அளிக்கப்பட்டுள்ளன. பாடல்கள் எளிதில் படித்து அனுபவிக்க பதம் பிரித்து அச்சிடப்பட்டுள்ளது. தரமான தாளில் பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டுள்ளது இதன் சிறப்பாகும். ஆசிரியர் தன்னுரையில் தாம் மாலவற்கு வழிவழி அடிமை உடையோம் என்பதை விளக்கமாகக் கூறியுள்ளார். தந்தை ஊட்டிய தமிழ் ஞானச்சுடர் விளக்கை மைந்தன் மனமகிழ்ந்து விரித்து உரைத்திருப்பதை இங்கே காண்கிறோம். ஆங்காங்கு உள்ள கருத்தைக் கவரும் கோட்டோ வியங்களும், முன்னும் பின்னும் உள்ள வண்ணப் படங்களும் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன.

**நூல் - நாலாயிர திவ்யப் பிரபந்தம் - டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகனின் நயவுரையுடன்**
**பக்கங்கள் - 1182** **விலை - ரூ. 750**
**வெளியீடு - ஆழ்வார்கள் ஆய்வு மையம் 29, திலக்தெரு. தியாகராய நகர். சென்னை - 17.**

# நூல் அறிமுகம்





மேலும் ''கண்ணொளியை'' அளித்து நன்மைபயக்கும் தேவாரப் பதிகங்கள் கண்ணொளி வழங்கிடும் சூரியனைப் போற்றும் ஆதித்யஹ்ருதயம், தமிழ்வழி ஸ்ரீருத்திரம் ஆகிய துதிகள் பின்னிணைப்பாக கொடுக்கப்பட்டுள்ளன.

''கண்போல் காத்து வைத்திருக்க வேண்டிய அற்புத நூல்''

**ஆசிரியர் - மயன்**
**விலை ரூ 40.00, பக்கங்கள் - 120**
**பதிப்பாளர் - வரம் (27வது நூல்)**
**33/15 எல்டாம்ஸ் சாலை**
**ஆழ்வார் பேட்டை, சென்னை - 600 018.**

## சென்னையில் ஒரு குருஸ்தலம்

# திருவலிதாயம் (பாடி)



திருவல்லீஸ்வரர்



ஜெகதாம்பிகை

தொண்டை நாட்டில் பாடல் பெற்ற 32 சிவஸ்தலங்களில் ஒன்றானது திருவலிதாயம், என்னும் ஷேத்ரம்பாடியில் உள்ளது.

சிவப்பிரணவம், சக்தி பிரணவம் ஆகியவற்றின் சங்கமமாக உதித்த விநாயகப் பெருமான் கஜ முகாசுரனை அடக்கி பிரம்ம புத்திரிகளான கமலை, வள்ளி ஆகியோரை மணந்தருளிய திருத்தலம்.

தன் தந்தையார் பெற்ற சாபத்தால் கருங்குருவியாக பிறந்த வியாழமுனிவரின் மகன் வலியன், கருங்குருவியாய் வந்து வழிபட்டு பேருபெற்ற திருத்தலம். அகத்தியரும் அநுமனும் வந்து பூஜித்து போற்றிய மகிமை மிக்க திருத்தலம். இத்தகைய புராணப் பெருமைகளை எல்லாம் ஒருங்கே பெற்ற திவ்வியத் திருத்தலமே, தொண்டை நாட்டு திருத்தலங்கள் 32ல் மிகவும் தொன்மையான திருத்தலமான பாடி, அருள்மிகு திருவல்லீசுவரர் திருக்கோவிலாகும். மகான்களால்போற்றப்பட்ட இத்தலம் அம்பத்தூர், ஆவடி செல்லும் வழியில் லூகாஸ் - டி.வி.எஸ். பஸ்நிலையம் அருகில் அழகிய நந்தவனத்துடனும், திருக்குளத்துடனும் தூய்மையாய் அமைந்துள்ளது.


சென்னையைச் சுற்றியுள்ள 11 சிவாலயங்களின் நடுவே திருவலிதாயம் உள்ளது. வியாழ குரு வழிபட்டு, பாபநிவர்த்தி பெற்றதன் காரணமாக குருஸ்தலம் எனப் பெயர் பெற்றது. திருஞானசம்பந்தர் அருணகிரி நாதர், வள்ளலார் இராமலிங்க சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் முதலான அருளாளர்கள்ால் பாடப் பெற்றதும் சூரியன், சந்திரன், இந்திரன், இமயன், ஸ்ரீ மகாவிஷ்ணு, ஸ்ரீ ராமர், ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ பரத்வாஜமுனிவர் ஆகியோரால் பூஜிக்கப்பட்டது மான பாடி என்று வழங்கும் திருவலிதாயப் புண்யக்ஷேத்ரத்தில் அருள்மிகு

ஜெகதாம்பாள் சமேத திருவல்லீஸ்வரர் சிறப்புறக் காட்சி தருகின்றார்.

**தலதரிசனம்:** கிழக்கு நோக்கி அமைந்துள்ள இவ்வாலயம் மூன்று நிலை கோபுரங்கள் கொண்டது. தீர்த்தம் பரத்வாஜ தீர்த்தமாகும். கோபுரத்தை ஒட்டிய கிழக்கு கோபுரத்தில் வட கிழக்கு மூலையில் நவகிரக சன்னதியின் கோபுரத்தின் அருகே குருபகவானின் தனிக் கோயிலையும் காணலாம்.

கோயிலின் உள்ளே இறைவன் திருவலிதாயநாதர், திருவல்லீஸ் வரப் பெருமான் ஆகிய திரு நாமங்களுடன் லிங்க ஸ்வருபமாக காட்சி தருகிறார். அன்னை தாயம்மை, ஸ்ரீ ஜெகதாம்பிகை எனப் பல பெயர்களில் வழங்கப்படுகிறார். சிவனை வணங்கும் ஸ்ரீ ஆஞ்சநேயர் போன்ற அபூர்வ சன்னதிகள் இவ்வாலயத்தில் உள்ளது.



**குருபகவானுக்கு தனி சன்னதி:** இத்திருக் கோயிலில் வியாழகுருவிற்கு தனி சன்னதி அமைக்கப்பெற்று குருபெயர்ச்சியில் குரு அருள் பெற குருபெயர்ச்சி விழா ஆண்டுதோறும் வெகு விமரிசையாய்க் கொண்டாடப்படுகின்றது.

இந்த குருஸ்தலத்தில் திருமணத்தடை, புத்திரபாக்யம் பொருட்டு உள்ள தோஷங்கள் நீங்க குரு பரிகாரத்திற்கு 9 வாரம், 21 வாரம் நெய் தீபம் ஏற்றி கடைசி வாரம் அர்ச்சனை, அபிஷேகம் செய்து மஞ்சள் வஸ்திரம் சாத்தி குருபகவான் மகிழும் வண்ணம் செய்தால் நன்மை பயக்கும்.

மேலும் இவ்வாலயத்தின் அனைத்து விழாக்களை யும் வெகு சிறப்பாக செய்து வரும் பரம்பரை அறங்காவலர், திரு பி.எஸ்.சண்முகசுந்தரம் நிர்வாக அதிகாரி திரு வெ.சாரங்கபாணி M.A. BL., அவர்களையும், மற்றும் சிப்பந்திகளையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

**மேலும் கோயில் பற்றிய விவரங்கள் அறிய**
**தொலைபேசி: 2654 0706**

கட்டுரை: **வசந்தா சுரேஷ்குமார்**

# கார்த்திகையில் அரன் அருள் பெற்ற நாயன்மார்கள்



ஆனாய நாயனார் - கார்த்திகை - அஸ்தம்



கணம்புல்ல நாயனார் - கார்த்திகை - கிருத்திகை



சிறப்புலி நாயனார் - கார்த்திகை - பூராடம்



மூர்க்க நாயனார் - கார்த்திகை - மூலம்



மெய்ப்பொருள் நாயனார் - கார்த்திகை - உத்திரம்



இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்தும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் 1.10.2008 அன்று கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கலந்தாய்வுக் கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலர் திரு. க. முத்துசாமி, இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை முதன்மை செயலர் மற்றும் ஆணையர் திரு. த. பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்களும், குற்றப்புலனாய்வுத்துறை கண்காணிப்பாளர் திரு.கே.எஸ்.சத்தியமூர்த்தி அவர்கள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள ஒன்பது முதல்நிலை செயல் அலுவலர்களுக்கு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் 10.10.2008 அன்று பணி நியமன ஆணையினை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலர் திரு. க. முத்துசாமி, இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை முதன்மை செயலர் மற்றும் ஆணையர் திரு. த. பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஏ.எம்.ஆர்.சிறப்புக் கட்டுரை

பேரருளான தாசனுடன்

# பேசிய பெருமாள்!



ஸ்ரீ வரதராஜப் பெருமாள்

இந்து சமயத்தின் மிகப் பழைமையானவையும். வரலாற்றுச் சிறப்பு பெற்றவையுமான பல திவ்ய திருத்தலங்களில் உன்னதமான திருக்கோயில்களில் ஒன்றுதான் சென்னையை அடுத்த பூவிருந்தவல்லியில் திகழும் ஸ்ரீ திருக்கச்சி நம்பிகள் மற்றும் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திருக்கோயில்.

ஸ்ரீ திருக்கச்சி நம்பிகள், ஸ்ரீமத் ராமானுஜர் போன்ற வைணவ மகாபுருஷர்களின் திருவடி ஸ்பரிசம் பெற்ற புண்ணிய பூமி இத்திருத்தலம். வைணவ பெரியோர்கள் அனைவரும் இத்திருக்கோயிலைத் தவறாது வந்து தரிசித்ததால் அவர்களுடைய திருவடிகள் யாவும் பதிந்த புண்ணிய பூமியுமாகும் இத்திருத்தலம்.

இந்துக்கள் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையில் ஒருமுறையேனும் தரிசிக்க வேண்டிய திவ்ய க்ஷேத்திரம் இப்பூவிருந்தவல்லி.

தொண்டை நன்னாடு! பக்தியில் திளைத்து மகிழ்ந்த எண்ணற்ற பல மகான்களும், தவச்சீலர்களும் அவதரித்த புண்ணிய பூமி. ஸ்ரீமத் நாராயணனின் அருட்கடாட்சத்தை இப்பூவுலகம் அறியும் வண்ணம் அஞ்சன வண்ணன் கண்ணனுக்கு அன்றே பாசுரம் பாடிய அருளாளர்களான பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மற்றும் திருமழிசையாழ்வார் அவதரித்த பெருமையையும் தன்னகத்தே கொண்டுவிளங்கும் நாடு.

கிருதயுகத்தில் படைப்பின் மூலமான பரம்பொருளைக் காணும் பொருட்டு எம்பெருமானைக் குறித்துத் தவமியற்றினார் பிரம்மதேவன். ஸ்ரீபிரம்மனின் தவத்தால் மகிழ்ந்த தேவப் பெருமான் ஸ்ரீ வரதராஜர் யாக குண்டத்தில் பிரம்மதேவனுக்குக் காட்சி தந்து அருளிய கச்சி மாநகர் என்று அழைக்கப்படும் காஞ்சி மாநகரம் விளங்குவதும் தொண்டை நாட்டில்தான்.

தன் இன்னுயிரையும் பொருட்படுத்தாமல் வைணவ நெறிகளையும், கோட்பாடுகளையும் உலகறியச் செய்த வைணவ ஆச்சார்யர்களுள் நடு நாயகமாகத் திகழும் மகாபுருஷரான ஸ்ரீமத் ராமானுஜர் அவதரித்த ஸ்ரீ பெரும்பூதூரும் தொண்டை நாட்டில்தான் அமையப்பெற்றுள்ளது. இத்தகைய சிறப்புகள் மிக்க தொண்டை நாட்டில் காஞ்சி வரதராஜப் பெருமானுக்குச் சேவைகள் செய்வதே தான் எடுத்த பிறவியின் பயன் என்று உணர்ந்து, தொண்டுகள் பல செய்த 'திருக்கச்சி நம்பிகள்' என்ற மகான் திருஅவதாரம் செய்த மகத்தான புண்ணிய பூமியே, ஸ்ரீ வரதராஜப் பெருமான், நம்பிகள் பொருட்டு திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள 'பூவிருந்த வல்லி' என்று அழைக்கப்படும் சிறப்பு வாய்ந்த திருத்தலமாகும்.

**வரலாற்றில் பூவிருந்தவல்லி!**

வரலாற்று ஏடுகளில் 'பூந்தண்மலி' என்று இப்பகுதி அழைக்கப்பட்டுள்ளது. (பூ-மலர்கள், தண்-குளிர்ந்த, மலி-நிறைந்துள்ள இடம்) குளிர்ந்த மலர்கள் நிறைந்துள்ள




இடம் என்பது இதன் பொருள். தர்மமே வெல்லும் என்ற நியதியினால் பாரதப்போரில் வெற்றிவாகை சூடிய தருமன், இத்திருத்தலத்தில் தவம் செய்து மன அமைதி பெற்றதால் இவ்வூர் 'தருமபுரி' என்றும் அழைக்கப்பட்டுள்ளது. இத்தலத்தில் அருள்பாலிக்கும் ஸ்ரீபுஷ்பவல்லித்தாயார் மல்லிகைப் பூவிலிருந்து தோன்றியதால் 'பூவிருந்தவல்லி' என்ற திருநாமம் ஏற்படக் காரணமாக இருந்தது என்றும் திருக்கச்சி நம்பிகள் இங்கு நந்தவனம் அமைத்து மலர்த்தொண்டு செய்து வந்தமையால் 'ஸ்ரீபுஷ்பமங்கலம்' என்றும் 'புஷ்பபுரி' என்றும் அழைக்கப்பட்டு வந்துள்ளது.

**திருக்கச்சி நம்பிகள் திருஅவதாரம்!**

இப்பூவுலக இன்பங்கள் அனைத்தும் மாயை என்பதையும், பிறவிப் பெருங்கடலைத் துன்பமில்லாமல் கடப்பதற்கு ஏற்ற வழி 'எம்பெருமானின் திருவடியை நாடி நிற்கும் சரணாகதியே' என்பதையும் உணர்த்த அத்திவரதனாம் பேரருளாளனின் விருப்பத்தினால் சிருஷ்டிக்கப்பட்ட ஸ்ரீ திருக்கச்சி நம்பிகள், சௌமிய வருடம் கி.பி. 1009-ம் ஆண்டு மாசி மாதம் மிருகசீருஷம் திருநட்சத்திரத்தில் வைசிய குலத்தில் ஸ்ரீ வீரராகவர் என்ற தவச்சீலருக்கும் ஸ்ரீமதி கமலையாருக்கும் மகனாகத் திருஅவதாரம் செய்தார்.

இந்த உலகத்தில் எவ்வளவு செல்வம் பெற்றிருந்தாலும் அவையெல்லாம் நம்மைவிட்டு நீங்கிவிடும் என்பதையும், என்றுமே நீங்காமல் நம்முடன் இருப்பது எம்பெருமான் மீது கொண்ட தூய பக்தியினால் பெறுகின்ற அவன் திருவருள் ஒன்றே என்பதையும் உணர்ந்து அவன் திருவடிகளைச் சிந்தையில் நிறுத்தி உள்ளம் உருக வழிபாடு செய்வதைச் சிறு வயதிலிருந்தே தமது வழக்கமாகக் கொண்டிருந்தார் திருக்கச்சி நம்பிகள்.

இம்மகாபுருஷரின் கனவில் நல்லதோர் திருநாளில் பிரபந்தரான ஸ்ரீதிருமழிசையாழ்வார் தோன்றி, 'உன் செல்வங்களைக் கொண்டு நந்தவனம் அமைத்து உலகளந்த உத்தமனுக்கு புஷ்பக் கைங்கர்யங்கள் செய்து வருவாயாக' என்று பணித்தார்.

திருமழிசையாழ்வாரின் திருவுள்ளத்தால் மனம் நெகிழ்ந்த திருக்கச்சி நம்பிகள், பூவிருந்தவல்லி தலத்தில் தம்மிடம் உள்ள செல்வங்களைக் கொண்டு அழகான நந்தவனம் அமைத்து பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் போல, காஞ்சித் தலத்தில் சேவை சாதிக்கும் வரதராஜப் பெருமாளுக்கு மாலைகள் தொடுத்துச் சமர்ப்பித்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஒருநாள் திருக்கச்சி நம்பிகள் வரதராஜப் பெருமானின் திருச்சந்நிதியில் மெய்மறந்து எம்பெருமானை நோக்கி தியானித்திருக்கையில் நம்பிகளின் எதிரில் இறைவன் காட்சி கொடுத்து, ''உனது தொண்டினால், உவந்தோம் நம்பி'' என்று திருவாய்மலர்ந்தருளினார். ஸ்ரீ தேவப் பெருமானான வரதராஜர் தன்னிடம் பேசியதைக் கண்டு நம்பிகள் மெய்சிலிர்த்து, கண்களில் நீர் மல்க அவன் கருணையை எண்ணி, எண்ணி, வியந்து உள்ளம் நெகிழ்ந்தார். மலர்த்தொண்டால் மனம் மகிழ்ந்த அத்திகிரிவாசன், தேவாதிதேவர்களுக்கும், மகரிஷிகளுக்கும் கூட எளிதில் கிட்டாத பேரின்பத்தை நம்பிகளுக்கு அளித்து அருள்புரிந்தார்.

இவ்வாறு தன்னிடம் பலமுறை பெருமாள் திருவாய் மலர்ந்தருளும் ஈடிணையில்லாப் பெரும் பேறினைப் பெற்றிருந்தார். ஸ்ரீ திருக்கச்சி நம்பிகள். வைணவ மகாபுருஷரான ஸ்ரீமத் ராமானுஜருக்கும் நம்பிகள் மூலமாகவே




தமது கட்டளைகளைத் தெரிவித்து வந்துள்ளார் ஸ்ரீ வரதராஜப் பெருமான்.

**ஆளவந்தாரை குருவாக ஏற்க அருளியது!**

ஸ்ரீ வைணவசம்பிரதாயப்படி ஆன்மா முக்திப் பேறு அடைய குரு நாதரின் கருணை அவசியம் என்பதை அறிந்த நம்பிகள், காஞ்சி வரதனின் திருவுள்ளப்படி திருவரங்கம் சென்று ஸ்ரீ வைணவ சம்பிரதாயங்களில் புலமை பெற்று உபய வேதாந்தியாகத் திகழ்ந்த நாதமுனிகளின் வழிவந்த ஆளவந்தாரைப் பணிந்து தன்னைச் சீடராக ஏற்று ஆசீர்வதிக்கும்படி வேண்டினார். பெரிய நம்பிகள் மூலமாக திருக்கச்சி நம்பிகளைப் பற்றி அறிந்திருந்த ஆளவந்தார், பேரருளாளப் பெருமானின் அருளைப் பெற்ற திருக்கச்சி நம்பிகளைச் சீடராக ஏற்று ஆசீர்வதித்து **'பேரருளான தாசர்'** என்ற திருநாமத்தையும் சூட்டி மகிழ்ந்தார். ஆளவந்தாரின் அருட்கருணை தமக்குக் கிடைக்க காரணமாக இருந்த பெரிய நம்பிகளுக்குத் தொண்டாற்ற எண்ணிய திருக்கச்சி ஆவினங்களை (பசுக்கள்) மேய்க்கும் அனுதினப் பணியினை மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியினை நாம் அறியும் வண்ணம் இன்றும் திருக்கோயிலில் உள்ள திருக்கச்சி நம்பிகளின் மூலவிக்கிரகத்தின் கீழ் ஆவினங்களின் உருவம் செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

**அத்திவரதரிடம் நம்பிகள் மந்திர உபதேசம் பெற்றது.**

வேதங்களும், உபநிஷத்துக்களும் இதிகாசப் புராணங்களும் புருஷோத்தமன் என வர்ணித்து வணங்கும் எம்பெருமானுக்குச் சேவைகள் செய்வதில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்த வைணவ மகா புருஷரான ஸ்ரீமத் ராமானுஜருக்கு 'ஆத்ம ஞானம்' குறித்து சில ஐயப்பாடுகள் தோன்ற, அதனை தேவப் பெருமானிடம் கேட்டு நிவர்த்திக்க நம்பிகளிடம் வேண்டினார். நம்பிகள் காஞ்சி ஸ்ரீ வரதராஜப் பெருமானின் திருக்கோயிலுக்குச் சென்று அவன் திருவடிகளை வணங்கி, ஐயங்களை எப்படிக் கேட்பதென்று தயங்கி நின்றார். தனது பக்தனின் மனதை அறிந்த அந்தப் பரமன் ஐயம் தீர்க்க திருவுள்ளம் கொண்டு ஆறு மந்திர உபதேசங்களை அமுதமொழிகளாகத் திருவாய் மலர்ந்தருளினார். அவை,

1. ''அஹமேவ பரம்தத்வம்''

- நாராயணனே தத்துவம். நாமே பரம்பொருள்.

2. ''தர்சநம் பேத ஏவச''

- ஜீவாத்மாவும், பரமாத்மாவும் வேறு.

3. ''உபாயேஷு ப்ரத்திஸ்யாத்''

- சரணாகதியே மோட்சத்திற்கு உகந்த வழி.

4. ''அந்திம ஸ்ம்ருதி வர்ஜநம்''

- (சரணாகதி அடைந்தவர்களுக்கு) அந்திம காலத்தில் நாராயணனை நினைக்க வேண்டுமென்ற நிர்பந்தமில்லை.

5. ''தேஹாவஸாநே முக்திஸ்யாத்''

- பிறவியின் முடிவில் மோட்சமுண்டு.

6. ''பூர்ணாசார்ய ஸமாச்ரய''

- குருவின் திருவடிகளை (பெரிய நம்பிகளை) நாடவேண்டியது.

எங்கும் நிறைந்தவனாய், எல்லா வல்லமைகளும் அருளக் கூடியவனாய் உள்ள ஸ்ரீ தேவராஜப் பெருமான் இவ்வுலக உயிர்களைக் காத்தருள அபூர்வ சக்தி வாய்ந்த ஆறு மந்திரங்களை நம்பிகளுக்கு உபதேசம் செய்து, ஸ்ரீமத் ராமானுஜர் அத்திகிரித் தலைவனின் அருளைப் பெறுவதற்கும் பெரிய நம்பிகளை குருவாக அடைவதற்கும் காரணமாகத் திகழ்ந்தவர் ஸ்ரீ திருக்கச்சி நம்பிகளே.

நம்பிகள் காஞ்சி வரதருக்கு மலர் மாலைகள் சமர்ப்பணம் செய்வதோடு

எம்பெருமானுக்குத் 'திரு ஆலவட்டக் கைங்கர்யம்' (விசிறி வீசுதல்) செய்து வருவதும் வழக்கம். அவ்வாறே திருவரங்கத்து இன்னமுதனுக்கும் சிறிது காலம் திரு ஆலவட்டக் கைங்கர்யம் செய்யும் பேறினைப் பெற்றார் நம்பிகள்.

**நம்பிகளுக்குக் காட்சி கொடுத்து அருளியது.**

தனது திருத்தொண்டினை வரதராஜப் பெருமானுக்குச் செய்து கொண்டிருக்கும் காலத்தில் ஒருநாள் நம்பிகளுக்கு வயோதிகத்தினாலும் காஞ்சி நகர் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. எம்பெருமானைத் தரிசித்து விடவேண்டும் என்ற வைராக்கியத்துடன் தவழ்ந்து கொண்டே காஞ்சி நோக்கி சென்றார் நம்பிகள் மேலே தொடர முடியாமல் நம்பிகளின் சரீரம் மிகவும் சிரமமடைந்தபோது, சூரிய உதயவேளையில் ஸ்ரீ வரதராஜப் பெருமான் கோடி சூரியப் பிரகாசனாக, சூரிய மண்டலத்திலிருந்து காட்சியளித்து அருள்புரிந்தார். ஸ்ரீவரதராஜப் பெருமான் காட்சியளித்த அதே தருணத்தில் அரங்கத்து அழகனும், திருமலை வேங்கடவனும் அம்மகானுக்குக் காட்சி கொடுத்து, தாங்கள் மூவரும் நம்பிகள் பொருட்டு இத்தலத்திலேயே நிரந்தரமாக எழுந்தருளி நித்ய சேவை சாதிப்பதாக அருளினர்.

**நம்பிகளை எம்பெருமான் ஆட்கொண்டது!**

ஸ்ரீ திருக்கச்சி நம்பிகள் தனது வயோதிகத்தையும், உடல் நலிவினையும் பொருட்படுத்தாமல் ஸ்ரீ வரதராஜப் பெருமானுக்கு ஆலவட்டக் கைங்கர்யம் செய்து வந்தபோது, அயர்ந்து கண்ணுறங்க, அவருடைய திருக்கரத்திலிருந்த ஆலவட்டம் சற்றே நழுவியது. திடுக்கிட்ட நம்பிகள், ஏற்பட்ட தவறுக்குப் பெருமானிடம் மனம் வருந்தி பொறுத்தருளும்படி வேண்டினார். அப்போது இறைவனுடைய திருவுள்ளம் பற்றி பரமபதம் என்னும் முக்தி நிலையை அடைய வேண்டி, வரதராஜப் பெருமானை ''தேவராஜ அஷ்டகம்'' என்னும் சக்தி வாய்ந்த திருமந்திரத்தால் சரணடைந்து, தன்னை ஆட்கொள்ள வேண்டினார். மனமுவந்த பெருமானும் நம்பிகளின் பிரார்த்தனையை நிறைவேற்ற திருவுள்ளம் கொண்டு தீர்த்த பிரசாதம், பரிவட்டம், ஸ்ரீ சடாரி முதலானவற்றை அளித்து தன் திருநாடான ஸ்ரீ வைகுண்டத்திற்கு அழைத்து ஆட்கொண்டார்.

திருக்கச்சி நம்பிகளுக்கு ஸ்ரீ ரங்கநாதனும், திருமலை வேங்கடவனும், வரதராஜப் பெருமானும் திருக்காட்சி தந்து அருளிய புனிதமான இடமே தற்போது பூந்தமல்லி என்று அழைக்கப்படும், அருள்மிகு திருக்கச்சி நம்பிகள் மற்றும் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் திருத்தலம் அமையப் பெற்றுள்ள இடமாகும்.

**அரங்கனின் அழகு!**

இத்தலத்தில் ஸ்ரீரங்கநாதரும் திருமலை ஸ்ரீனிவாசப் பெருமானும் ஸ்ரீ வரதராஜப் பெருமானும் அர்ச்சாவதார மூர்த்திகளாக அற்புதக் காட்சி தருகின்றனர். ஸ்ரீ வரதராஜப் பெருமான் சூரிய மண்டலத்துடன் மேற்கு முகமாக நின்ற திருக்கோலத்தில் தனது தேவியருடன் அருள் பாலிக்கின்றார். சயனத் திருக்கோலத்தில் ஸ்ரீ நம்பிகளின் கருவறையை நோக்கியவாறு தனது வலது திருக்கரத்தால் அபயமுத்திரை காட்டும் அரங்கனின் அழகை விவரிக்க வார்த்தைகள் இல்லை. பல பிறவிகளில் புண்ணியம் செய்தவர்களுக்கு மட்டுமே இப்பிறவியில் கிடைக்கும் இந்த தெய்வீக தரிசனம்.

**திருப்பணிகள்!**

ஈடில்லாத தெய்வீகச் சிறப்புகள் நிறைந்த இத்தலத்தில் தற்போது வெளிச்சுற்று பிரகாரத்தில் தரைத்தளம் அமைக்கும் பணியும், புனித தீர்த்தமான வெண் தாமரைக்குளம் சீரமைக்கும் பணியும் புதிய திருத்தேர் அமைக்கும் பணியும் நடைபெறவுள்ளன.

''ரதஸ்தம் கேசவம் த்ருஷ்ட்வா

புனர் ஜென்ம நவித்யதே!'' -என்பது மகரிஷிகளின் வாக்கு.

சர்வலோக சரண்யனான எம்பெருமானை ரதத்தில் (தேரில்) வணங்குபவர்களுக்கு மீண்டும் பிறப்பு இல்லை என்பதோடு, இதுவரை செய்த தீய வினைகளும் அவர்களை விட்டு அகலும் என்பதே இதன் பொருளாகும். எனவே பக்தியில் சிறந்த தமிழக மக்கள் திருப்பணிகளுக்கு மனமுவந்து உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். திருப்பணிகளுக்கான நன்கொடையை காசோலை, வரைவோலை, மணியார்டர் மூலமாகக் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

நிர்வாக அதிகாரி,
அருள்மிகு திருக்கச்சி நம்பிகள் மற்றும்
ஸ்ரீவரதராஜப் பெருமாள் திருக்கோயில்,
பூவிருந்தவல்லி, சென்னை -56.
போன்- 044-26272066.

குறிப்பு - சென்னைக்கு அருகில் 21 கி.மீ. தூரத்தில் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது இத்திருத்தலம்.

நன்றி : குமுதம் ஜோதிடம் இதழ்

# திருக்கோயில்களின் வளர்ச்சி நிலை




...சென்ற இதழ் தொடர்ச்சி

டாக்டர் திருமதி இராதா தியாகராசன், எம், ஏ., பி.எச்.டி.,

செங்கற் கோயிலில் தோன்றிய அடுத்தக்கட்ட வளர்ச்சியாக அடுத்து மாடக்கோயில் அமைந்தது. அதில் கருவறை உயரமான மேல் தளத்தில் இருக்கும். இத்தகைய கற்கோயில்களைத் தஞ்சாவூர் சீர்காழி, ஆக்கூர், சாய்காடு முதலிய ஊர்களில் காணலாம்.

கி.பி. 6 ஆம் நூற்றாண்டில், பல்லவர் ஆட்சி தோன்றியது தொடங்கி, திருக்கோயில் அமைப்பு முறையில் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்தன. இம் மாற்றங்களின் வாயிலாகவும், அவற்றைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட கோயில்களின் அமைப்புக்களின் வாயிலாகவும் ,வரலாற்று அறிஞர்களால் திராவிடக் கோயில் கட்டடக்கலை என்று வழங்கப்படுகின்றது.



பல்லவர் காலத்தில் ஏற்பட்ட முதல் மாற்றம் செங்கற்கோயில்களைக், கற்கோயிலாக மாற்றி அமைத்ததாகும்.

கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் மகேந்திர வர்மனும் அவன் மகன் மாமல்லன் என்ற நரசிம்ம வர்மனும் தளவானூர், மண்டகப்பட்டு, மாமல்லபுரம், முதலிய ஊர்களில் மலையிலும், கற்பாறையிலும், வெட்டிக் குடைந்து, குடைவறைக் கோயில்களை அமைத்தனர். அவை குகைக் கோயில் என்றும் வழங்கப்பட்டன. மாமல்லன் பெரும் பாறையைச் செதுக்கி, அதனையே ஒரு முழுக் கோயிலாக ஆக்கிப் புதுமையைச் செய்தான். இவை ஒற்றைக் கற்கோயில்கள் என்றும் ரதங்கள் என்றும் வழங்கப்பட்டன.

இவற்றைத் தொடர்ந்து கல்லினால் கட்டுமானக் கோயில்கள் அமைக்கப்படும் நிலை தோன்றியது மற்றும் ஒரு வளர்ச்சியாகும். இதில் தோன்றிய புதுமை, கோபுரமும் விமானமும் ஆகும்.

தமிழர்களின் சமய உணர்வும், கலை ஆர்வமும் பெருகப் பெருகக் கோயில்களைத் தொலைவிலிருந்தே கண்டு கொண்டு இறைவனை வணங்குவதற்கு வாய்ப்பாகக் கோபுரமும் விமானமும் எழுப்பப்பட்டன. ஞானசம்பந்தரும் நாவரசரும் கண்டு வணங்கிய கோபுரம் பற்றி,

**"கோலம் பெருகிய நிலை ஏழு கோபுரம்**


**தொழுது உள்புக்கார்."**

என்று சேக்கிழார் பாடுகின்றார்.

மங்கையர்க்கரசியாரின் வேண்டுகோளை ஏற்ற, திருஞானசம்பந்தர் பாண்டிய நாட்டை அடைந்து, மதுரையை நெருங்கியபோது, **" ஈங்கு நம் பெருமான் திருவாலவாய் மற்று எம் மருங்கினது"** என வினவ, அடியார்கள், முன்பு நின்று, எடுத்த கைகளால் காட்டி, **" முருகு அலர் சோலைகள் சூழ்ந்து மின் பொலி விசும்பை அளக்கும் நீள் கொடி சூழ் வியன் நெடுங் கோபுரம் தோன்றும் திருவாலவாய் இது என்றார்"** , எனச் சேக்கிழார் பாடுகின்றார்.

முதன் முதலில் கல்லினால் கட்டிய கட்டுமானக் கோயில், காஞ்சிபுரத்திலுள்ள இராசசிம்மன் கட்டிய கைலாசநாதர் கோயிலாகும்.

கி.பி. 9ஆம் நூற்றாண்டு தொடங்கிய பிற்காலச் சோழர் ஆட்சிக் காலத்தில் தமிழகக் கோயில்களின் வளர்ச்சி மிக்க சிறப்பாக இருந்தது. இது கோயில் கட்டடக்கலைக்கும் சிற்பக் கலைக்கும், உலோகச் சிலை அமைக்கும் கலைக்கும் ஒரு பொற்காலமாகும். உலகிலேயே மிகப்பெரிய கோயில்களை அமைப்பவர் என்ற புகழையும் பெருமையையும் தமிழினத்திற்கு பெற்றுத்தந்தவர்கள் இச்சோழ மன்னர்களே ஆவர்.



13ஆம் நூற்றாண்டில் பேரரசன் முதலாம் இராசராசசோழன். தஞ்சையில் கட்டிய பெருவுடையார் கோயில்மூலம் கோயில் கட்டடக் கலையில் எழில்மிகு புது மாற்றத்தை ஏற்படுத்தி உலகப் புகழ் பெற்றான். இக்கோயிலின் விமானம், பீடம் உட்பட 216 அடி உயரம் கொண்டது. அடி முதல் முடி வரை கருங்கற்களால் அமைக்கப்பட்டது. இதைப் பற்றி Percy Brown என்பார்.



"Unquestionably, the finest single creation of Dravidian craftsmen, the Tanjore Vimanam is the touch stone of Indian Architecture as a whole."

என்று புகழ்ந்துள்ளார்.

இக்கோயிலும் முதலாம் இராசேந்திரன் கங்கை கொண்ட சோழபுரத்தில் கட்டிய கங்கை கொண்ட சோழபுரத்தில் கட்டிய கோயிலும் கட்டடக் கலையின் சிறப்பை உச்சநிலைக்கு உயர்த்தின.

அவற்றைத் தொடர்ந்து மற்ற சோழ மன்னர்கள் சோழ நாடெங்கும் கோயில்களைக் கட்டி நிரப்பினர். தாராசுரம் கோயிலும் திருப்பூவணம் கோயிலும் சிற்பக் கலைச் செல்வங்களாக விளங்குகின்றன. இவற்றுள், தாராசுரம் கோயில் சக்கரத்துடன் கூடிய தேர் போன்று அமைந்த சிறப்பினால், சக்கரக் கோயில் என்ற வகையைச் சேரும்,

இதனை தேவாரகாலத்திலேயே கரக்கோயில் என்று வழங்கினர்.

சோழர்கள் காலத்தின் தனிச்சிறப்பு கருவறைகள் மேல் அமைந்த உயர்ந்த விமானங்களே. பல்லவர்கள் காலத்தின் விமானங்கள் உயரக் குறைவானவை. ஆனால் சோழர்கள், விமானங்களை வானளாவ அமைத்து உயர்ந்து நின்றனர்.

சோழர்களை அடுத்துப் பாண்டியர்கள் காலத்திலும் பெரும் கோயில்கள் தோற்றம் பெற்றன. தென்காசி, திருநெல்வேலி போன்ற ஊர்களில் பாண்டியர் காலக் கோயில்களைக் காணலாம். பாண்டியர்கள் காலத்தில் விமானங்களைக் காட்டிலும் வாயிற் கோபுரங்களே மிக உயரமாக அமைக்கப்பட்டன.

பாண்டியர்களுக்கு பின்னர் வந்த விசயநகர, நாயக்க மன்னர்கள் காலத்தில் மண்டபங்களும், திருச்சுற்றுக்களும் அமைக்கப் பெற்றன. மதுரையில் உள்ள புதுமண்டபம், திருவரங்கத்தில் உள்ள கிளி மண்டபம் போன்றவை குறிப்பிடத்தக்கன.


பின்பு, மதில்களில் நான்கு திசைகளிலும் இராஜ கோபுரங்களைக் கட்டி விரிவுபடுத்தினர். நூற்றுக்கால் , ஆயிரங்கால் மண்டபங்களை அமைத்தனர். இந்த அமைப்பை மதுரை, மீனாட்சி அம்மன் கோவிலில் இன்றும் காணலாம்.


கட்டடக்கலை மட்டும் அன்றி, சிற்பம், விக்கிரகங்கள், நடனம், இசை, ஓவியம் முதலிய கலைகள் வாழ்வதற்கும் சமுதாயப்பணி நடைபெறுவதற்கும் கோயில்கள் மைய இடங்களாக அமைந்தன.

நம் திருக்கோயில்களைச் ''சிற்பங்களின் களஞ்சியம்'' என்று கூறலாம். மண்டபம், விமானம், கோபுரம் ஆகிய எல்லா இடங்களிலும் இதிகாசபுராணச் செய்திகளை விளக்கும் சிற்பங்கள் நிறைந்துள்ளன. இவை தவிர, தெய்வத் திருமேனிகள் யாவும் கல்லிலும், செம்பிலும், ஐம்பொன்னிலும் கலையழகு மிக்கப் படிமங்களாக அமைத்தனர். படிமக்கலை, தமிழகத்தில் தனியாக வளர்ந்து வந்த அற்புதக் கலையாகும்.

திருக்கோயில்கள் கலை வளர்க்கும் இடமாக மட்டுமின்றிக் கல்விச் சாலைகளாகவும், நீதி மன்றங்களாகவும் பயன்பட்டன. உத்திரமேரூர்க் கல்வெட்டு, அவ்வூர்க் கோயிலில் வழக்குத் தீர்க்கப்பட்ட செய்தியைக் கூறுகின்றது. ஊர் மக்கள் தம் சொத்துக்களையோ, உடைமைகளையோ பொது நன்மைக்கு வழங்கக் கருதினால் கோவிலுக்கு வழங்குவார்கள். யாரேனும் தவறு செய்தமைக்காக ஊர்ச் சபைதண்டம் விதித்தால் அத்தண்டத் தொகையைக் கோயிலில் செலுத்துமாறு விதிப்பார்கள். கோயில் திருவிழாக்களில் பல்வேறு பணிகளை மக்கள் உரிமையோடு செய்தனர். இவ்வாறு சமுதாயமும் திருக்கோயிலும் இணைப்பும், பிணைப்பும் உடையவையாக விளங்கின.

திருக்கோயில்களின் தொடர்பால், இலக்கியமும் கலையும் வளர்ச்சியுற்றது. தல புராணங்கள், பிள்ளைத் தமிழ், தூது கலம்பகம், உலா போன்ற





சிற்றிலக்கியங்களும், தோற்றம் பெற்றன. திருக்கோயில்களில், இராமாயணம், பாரதம் போன்ற நூல்கள் படிக்கப் பெற்றதையும், படிப்போர்க்கு நிலங்கள் வழங்கப்பட்டதையும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.


நமது நாட்டுக் கோவில்களின் சிறப்பைக் கண்ட ஆங்கில தத்துவ அறிஞர் ஒருவர்

"A Hindu Temple is not a place of worship. It is an expression of the whole community - its psycho and personality. It is a link between man, God and nature."

என்று கூறுகிறார்.

இன்று இளந்தலைமுறையினர் கோயில் கட்டடக் கலை ஆய்வினைத் தனிக்கோயில் ஆய்வாக ஆங்காங்கு மேற்கொண்டு வருவது மகிழ்ச்சிக்குரியது. இதனால் அவர்களின் உள்ளத்தில் கோயில்களின் கலைச் செல்வம் பற்றிய ஆர்வம் பசுமையாகத் தளிர்த்து இருக்கிறது என்பதை அறிகிறோம். திருக்கோயில் பற்றிய கருத்தரங்குகள், வரலாற்று ஆய்வுகள், நடத்தி திருக்கோயில்களின் பழஞ்சிறப்பினை வெளிக் கொணர்ந்து நம் முன்னோர் திறத்தினைப் போற்றுதல் எவ்வாற்றானும் ஏற்றமுடையதாகும்.


## தேவேந்திர தரிசனம்



பெருந்தெய்வங்கள் வீதியுலா வரும் போது ஈசான திசையில் நிறுத்தி சிறப்பு வழிபாடுகள் செய்வது வழக்கம். பிரதோஷத்தில் பெருமானை ஈசான திசையில் வைத்துச் சிறப்புடன் பன்னீர் அபிஷேகம், பீர்த்ராதனை செய்வதைக் காண்கிறோம். முருகன் சூரபத்மனை வெற்றிகொண்டு வலம் வரும் போது அவரை ஈசான திசையில் நிறுத்திச் சிறப்பு வழிபாடுகள் செய்வர். இதற்குத் தேவேந்திர தரிசனம் என்பது பெயர். திருவிடைமருதூரில் தேவேந்திர தரிசனம் சிறப்புடன் நடைபெற்று வருகிறது.

# திருமாலடியார்களும் திருவரங்கனும்

முனைவர் ஏ.பரந்தாமன்



குலசேகராழ்வார் இப்பதிகத்தில் திருமால் தேடிப் பெருவதற்கு அருமையானவன் என்றும், தன்னை அடைந்தவர்களுக்கு வலிமையைக் கொடுப்பவன் என்றும் விளக்கிக் கூறுகின்றார். ''பத்துடை அடியவர்க்கு எளியவன் பிறர்களுக்கு அரியவித்தகன் எனும் நம்மாழ்வார் பாசுரப்பொருள் இப்பதிகத்திற்கு உரம் ஊட்டுவதாக அமைந்துள்ளது.

பாசுரம் - 1

**காணும் கண் பயன்**

திருமால் தேடிப் பெறுவதற்கு மிகவும் அருமையானவன். தன்னை அடைந்தவர்கட்கு வலிமையைக் கொடுப்பவன். தேன் போன்று தெவிட்டாத இனிமையானவன் தென் திசையில் இருக்கும் திருவரங்கத்தில் கோயில் கொண்டு திருவரங்கத்திற்குத் தலைவனாக விளங்குபவன். வாடாத வனமாலையைத் தன் திருமார்பின் அணிந்துள்ளவன். அகலகில்லேன் இறையும் என்று அணிமா மலர் மங்கையான திருமகளைத் தன் மார்பகத்தில் வைத்துக் கொண்டிருப்பவன். அத்தகைய திருவரங்கனை வாழ்த்தி, அவன் மீது பக்தி கொண்ட மனத்தை உடையவராய் வேட்கையுடன் இருந்த அடியார் தம்மை மறந்து, ஆடிக் களைத்து, களித்து, வாய் விட்டுக் கூவி அழைத்து, அதனால் களிப்பு எய்தும் உண்மையான பக்தியுடைய அடியார்களின் கூட்டத்தினைக் காணும் பேற்றினைப் பெற்றால், அதுவே கண்படைத்ததின் பயனாகும். காணப் பெறவில்லையானால் கண் பெற்றும் பெறாதவர்களேயாவார். அவர்கள் கண் இருந்தாலும் குருடர்களாகவே கருதப்படுவர். இதனையே **''கண்ணாரக் கண்டுகக்கும் காதல்''** என்கின்றார் ஆழ்வார்.

தேட்டரும் திறல்

நம்மால் தேடிக் காணப்பெறாதமையாலும் அவன் அருளால் மட்டுமே காணப் பெற முடியும் அருமையுடையன். ''அவன் அருள் அல்லால் அருளுமில்லைபல்லார் அருளும் பழுது'', ''அவன் அருள் இன்றி அவன்தாள் வணங்கும் பேறு. அரிது'' எனும் ஆழ்வார்கள் அருளிச் செயல் இங்கு காணத்தக்கனவாகும்.

**''தேட்டரும் திறல் தேனினைத் தென்**

**அரங்கனைத் திருமாது வாழ்**

**வாட்டமில் வனமாலை மார்வனை**

**வாழ்த்தி மால் கொள் சிந்தையராய்**

**ஆட்டம் மேவி அலந்து அழைத்து அயர்வு**

**எய்தும் மெய்யடி யார்கள் தம்**

**ஈட்டம் கண்டிடக் கூடுமேல் அது**

**காணும் கண் பயன் ஆவதே''**

பெருமாள் திருமொழி 2-1

பாசுரம் - 2

கங்கை நீர் குடைந்தாடும் வேட்கை என்னாவதே.

மலர்களிலே சிறந்த தாமரையில் தோன்றிய (தாமரையார்) திருமகளின் திருத்தோள்களை ஒருசேரத்தழுவிக் கொண்டவன் திருமால். ஒளிமிக்க ஒப்பற்ற ஒருஅம்பினராய் கிஷ்கிந்தையில் இருந்த, சுக்ரீவனால் காட்டப்பட்ட ஏழு உறுதியான ஆச்சாமரங்களைத் துளைத்து வீழ்த்தி, தன் வலிமையைக் காட்டியவன் இராமனாகிய திருமால். அத்தகைய சிறப்புக்களை உடைய திருமால் திருவரங்கத்தில் திருவரங்கனாக எழுந்தருளி அருள் சுரந்து வருகின்றான் எளியனாகப் பிறந்து பசுக்கூட்டங்களை மேய்த்தவன் கண்ணனெம் பெருமான் பரமபதமே தமது குறிக்கோளாகக் கொள்ளும் அடியவர்களுக்கு அப்பரமபத-பிறவாப் பிற்வியைத் தருபவன் திருவரங்கன். ''காட்டினான் திருவரங்கம் உய்பவர்க்கு உய்யும் வண்ணம்'' எனும் தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிச் செயல் ஈண்டு நோக்கத் தக்கதாகும். திருமால் அடியார்கள் இப்பரமபத பேற்றைப் பெற இத்திருவரங்கனைப் பற்றுவதே சிறந்த வழியென்றுணர்ந்து, அவனையே நினைந்து நினைந்து நெக்குருகி, மகிழ்ச்சிப் பெருக்கால் திருவரங்கனே என்று பாடியும், ஆடியும் இன்புறுவர். அத்தகைய சிறப்பு வாய்ந்த திருமாலடியவர்களின் திருவடித் தூசியில் புரண்டு ஆடுவது புனித நதியென்றும் பாவங்களைப் போக்கக் கூடியது என்றும் போற்றப்படுவதுமாகிய கங்கைநீரில் நீராடுவதை விட சாலச் சிறந்ததாகும். எனவே கங்கை நீரைவிட திருமால் அடியார்களின் பாததூளியே சிறந்தது என்றும், கங்கை நீரில் நீராடும் வேட்கை பயனற்றது என்றும் பாடுகின்றார் குலசேகராழ்வார். ''ஆதியஞ்சோதி உருவை அங்கு (பரமபத்தில்) வைத்து, இங்குப்பிறந்து, கள்ளங்கபடமற்ற எளிய ஆயர் குலத்திலே பிறந்து) படாத துன்பங்கள் பட்டு, (கம்சனால் ஏவப்பட்ட அசுரர்கால் பெருத் துன்பங்கள் அடைந்து) காடுமேடெல்லாம் திரிந்து, கந்து காலிகளை மேய்த்து'' எனும் சூத்திரம் இங்கு காணத்தக்கதாகும்.

**''தோடுலா மலர் மங்கை தோளிணைத்**

**தோய்ந்ததும் சுடர் வாளியால்**

**நீடுமாமரம் செற்றதும் நிரை**

**மேய்த்ததும் இவையே நினைந்து**

**ஆடிப்பாடி அரங்க!ஓ! என்று**

**அழைக்கும் தொண்டர் அடிப்பொடி**

**ஆட நாம் பெறில் கங்கை நீர் குடைந்து**

**ஆடும் வேட்கை என்னாவதே''**

(பெருமாள் திருமொழி 2-2)

தொடரும்.



# சிவநெறி விளக்கிய அறிவியல் பேரொளி

- எம்- குப்புசாமி.



''நாத்தழும் பேறவே ஏத்திநாம் உய்குவோம்
கூத்தப் பெருமான் கழல்''

இந்நிலவுலகின்கண் வழங்கா நின்ற பல்வகைச் சமயங்களுக்கெல்லாம் தோற்றுவாயாகி, அளவிடற்கொண்ணாத் தொன்மைத்தாயிருந்தும், காலப்போக்கில் மேலும் விரிவாக மறை பொருட்பேருண்மைகளை, (மக்கள் விரைவில் உய்திபெற்றோங்குமாறு), வரிசைவரிசையாக, மணற்கேணியினை யொப்பச் சிவனடியார்கட்கெல்லாம் வழங்கிக் கொண்டே வருவது, நம்தம் சிவநெறியே யாகுமென்பது தேற்றம். புறச்சமயத்தார் எவரும் உணர்ந்து தெளிவெய்தற்கு வெகுகாலத்திற்கு முன்னரே பின்னைப் புதுமைக்கும் புதியனவாகிய அறிவியற் செய்திகளை, இடையறாது உள்ளுணர்வு மிக்கோர் வாயிலாக உலகவர்க்கெல்லாம் தெரிவித்துக் கொண்டே வருகின்றனன், எல்லாம் வல்ல சிவபெருமான் என்றறிகிறோம். உலகியல் அறிவு முன்னேறி வருவது போன்றே சமய உணர்வும் நாளுக்கு நாள் மிகுதியாய் வளர்ந்து வருவது காண்கின்றோம். யாவரும் ஒப்பக் கூடிய அடிப்படைக் கருத்துக்களெல்லாம் சிவநெறியினையே தோற்றுவாயாக உடையன என்பதூஉம் கண்டாமன்றே! இத்தகுசெம்மை சான்ற நமது நெறியின் கோட்பாடுகள் அறிவியலுக்கு மிகவும் பொருந்துவன என்பதை எடுத்துக் காட்டுவான் வேண்டியே இச்சிற்றுரைக் குறிப்பினை வரையலுற்றேன்.

இறைவனின் உண்மை நிலைஎது? ஆன்மாக்களை அவன் உய்யக் கொண்டருளும் வகைஎது? உயிர்கள் எல்லாம் பல்லாற்றானும் இடுக்கட்பட்டு அலமருதல், யாதினால்? மலப்பிணிப்பு? எவ்வகைத்து? மும்முதல் பொருட்கள் எவை என்பனவற்றைச் செவ்விதின் விளக்குவன சைவநெறி நூல்கள். இறைவன், உலகெலாம் முழுமையாக உணர்ந்து ஓதற்கரியவன், இன்னதன்மையன் என்றறியப்படா அன்ன தன்மையன் என்று தமிழ் நூல்களும், நிர்க்குணன் (குணம் குறியிலான்). நிமலன் எனப்பிறரும் உரைத்துப் போந்தாரேனும் இறைவனின் ஒரு சில பண்புகள் பற்றி நாம் சிறிதளவாவது அறிந்து கொள்ளுமாறு தனது எட்டுவகை நிலைகளை நமக்குத் தெரிவிக்கின்றனன், மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் நிற்கும் சிவபரம்பொருள். இவ்வெட்டு வகைப் பண்புகளை விவரிக்கப்புகுவதனாலேயே சைவ நெறியின் ஒப்புயர்வற்ற பெருநிலை விளங்கும். இப்பண்புகளை ஒவ்வொன்றாக ஈண்டு எடுத்துக்காட்டுதல் நலம். இறைவன்.

1. வரம்பில்லாத ஆற்றல் உடையவன்
2. எல்லையற்ற பேரருளாளன்,
3. அளவிலாத பேரின்பம் உடையவன்,
4. இயல்பாகவே பாசங்களினின்று

நீங்கியவன்,

5. தோற்றம் இறுதி இல்லாத தூய ஓங்கார வடிவினன் (தூய உடம்பு),

6. தன் வயத்தனாய் நிற்பவனேயன்றிப் பிறரெவர்க்கும் ஆட்படுவானல்லன்,

7. இயற்கை உணர்வினன்,

8. முற்றும் உணர்ந்தவன்

இவ்வெண்வகைப் பண்புகளும் சிவபெருமானுக்கே உரியன. திருக்குறளில் பேசப்படும் எண் குணத்தான் பற்றி விளக்கும் பரிமேலழகர், இவ்வெட்டுப் பண்புகள் சைவ ஆகமத்துள் கூறப்பட்டுள்ளன என்றுரைத்திருப்பதும் நோக்குதல் வேண்டும்

எல்லையில்லாத ஆற்றலும், பேரருளும், பேரின்பமும் கொண்ட சிவபிரான் ஏனையோர்க்கு வேண்டிய ஆற்றலும், அருளும், இன்பமும் தரவல்லவர். இயல்பாகவே, பாசங்கள் எவற்றாலும் பிணிப்புறாதவர். அவர் தோற்றம் ஈறு இல்லாதவர். இறைவன் சங்கற்ப மாத்திரையானே யாவையும் செய்யவல்லவன். நினைத்தபொழுதில் மக்கள் முன்னிலையில் வந்து தோன்றி, அருள் செய்து, பின் மறைதலும் அவரது இயல்பு.

சிவபிரான் பிறர் எவர் ஆணைக்கும் உட்படாது, தன் வயத்தனாய் நின்று வேண்டுவனவற்றை இயக்கும் பெற்றியன். **'சேர்ந்தறியாக் கையானை'** என வரும் மணிவாசகர் திருவாக்கை நோக்குக. **''இதம்தேயுக்தம் வா பரமசிவ காருண்ய ஜலதே''** எனத் தொடங்கும் ஆதி சங்கரரின் சிவானந்தலகரியில் அடிமுடி காண மாட்டாது **''அலமந்தனர் அரியும் பிரமனும்''** (பாடல் 99) என வருவதும் தெரிகின்றோம். திருமூல நாயனாரும், **ஓடி வந்து எல்லாம் ஒருங்கிய தேவர்கள் சிவபிரானை நாடி வந்து, ''இறைவா நம'' வென்று கும்பிட ஈடில் புகழோன் ''எழுக''** என்ற செய்தியினை விளக்கியுள்ளார். (திருமந்திரம்) ஆலநஞ்சம் உண்டு தேவர்களைக் காத்தருளிய திருக்குறிப்பு.

இறைவன் முற்றும் உணர்ந்தவன். மேலும் இயற்கையாகவே முற்றுணர்வினனாய் எக்காலத்தும் இருப்பவன். இவனுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. **"உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந்து அறிதி என்று வெள்கினேன், வெள்கி நானும் விலாவிறச் சிரித்திட்டேனே"**, என்றார் அப்பர். அப்பரடிகளுக்கே பெருஞ்சிரிப்பு வந்து விடுகிறது. சிவபிரானிடமிருந்து யாதொன்றனையும் மறைத்து மூடுதல் இயலாது என்ற நினைவெழுந்ததும், இடிஇடி என நகைத்துள்ளார் அப்பர்பிரான்.

இறைவனால் படைக்கப்பட்ட உயிர்களுக்கு இடையூறு ஏதும் செய்யாதிருத்தல் சிவநெறியாகும். அன்றியும் துயருழக்கும் உயிர்ப் பொருள்கட்கெல்லாம் இயன்ற அளவு முன் வந்து உதவி செய்தலும் வேண்டும். இவ்வகை அறமே சைவத்தின் ஆணிவேர் என்னல்தரும். இதனின் மிக்கவோர் ஆக்கம் யாதொன்றுமில். ''அஹிம்சைபரமோதர்மஹா'' என்பதைவிட ஓர் படி உயர்ந்தது ஆருயிர்கட்கெல்லாம் அன்பு செய்கின்ற சிவநெறி ஒழுக்கம்.

இனி முன்பு செய்த தீவினையால் (ஊழ்) ஏற்படும் துன்பங்களையும் ஓர் அளவு குறைத்தல் ஒல்லுமென்றும் அத்துன்பங்களின் தாக்கத்தினைக் கட்டுப்படுத்தல் இயலுமென்றும் சிவநெறியினர் காட்டியுள்ளனர். சிவனடியார்களுக்கு அமுது செய்வித்தல், அவர்களுக்கு வேண்டிய பொருள் கொடுத்துவுதல், பல்லாற்றானும் அவர்களுக்குத் துணை நிற்றல், முதலிய சீலங்களால் ஊழ்வலியின் பிடிப்பிலிருந்து கூட விடுபடுதல் கூடுமென்பது சிவநெறி. உள்ளன்போடு எப்பொழுதும் சிவபிரானின் பேரருள் திறத்தினை வியந்து பாடும் அடியார்கள் எவ்விதத் துன்பத்தினின்றும் விடுபடுவர் (வல்வினை தீர்தல் எளிதாமே) - திருஞானசம்பந்தர்

***''ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்***
**தாழாதுஞற்றுபவர்''** - (குறள் 620)

மக்கள் கூட்டத்தினை, சகலர், பிரளயா கலர், விஞ்ஞான கலர் என்று மூவகைப்பிரிவின் வைத்தெண்ணி, ஆணவம் கன்மம் மாயை என்னும் மலப்பிணிப்பினால், ஆன்மாக்கள் நிற்கும் நிலையை விளக்குவதும் இம்மூன்றும் தீர்ந்தொழிந்த பின்னரே, இறைவனே இரண்டறக்கலத்தல் கூடும் என விரித்துரைத்துள்ளதுவும் காணுங்கால், அறிவியல் பேரொளியே சைவ நன்னெறியாய்த் திகழ்வது என்பது தெளிவாகின்றது. சிவபிரான் விருப்பு வெறுப்பு அற்றவர். காருண்ய ஜலதே எனப்படுபவர். அவர்தம் திருவருள் எல்லா அடியார்களையும் ஊக்குவித்து மேல் நிலைக்கு உய்ப்பதாகுக.

**"தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"**

# ஓங்கி உலகளந்த உத்தமன்

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

இரணியனுடைய புதல்வர் பிரகலாதர், பிரகலாதருடைய புதல்வன் விரோசனன், விரோசனனுடைய மைந்தன் பலி. இந்தப்பலி இந்திரனால் எல்லாநலன்களையும் இழந்து பிருகு வமிசத்தில் வந்த மகரிஷிகளையடுத்து அவர்களுக்குச் சீடனாக இருந்தான். அம்முனிவர்கள் அப்பலியின் க்ஷேமத்தைக் குறித்து **'விசுவசித்து'** என்ற ஒரு யாகத்தைச் செய்தார்கள். கதிரவன் குதிரைகட்கு நிகரான புரவிகள் பூட்டிய பொற்றேரும், சிங்கக் கொடியும்; பெரிய வில்லும் குறையாத அம்பறாத் தூளிகள் இரண்டும், உறுதியான கவசமும் அந்த யாகத்தில் உண்டாயின. இவைகளைப் பலிக்கு முனிவர்கள் வழங்கினர். பிதாமகரான பிரகலாதர் வாடாத பத்ம மாலையையும், சுக்கிரர் ஒரு சங்கத்தையும் அவனுக்குக் கொடுத்தார்கள். பலி பொற்றேரில் ஊர்ந்து சங்கத்தொனி செய்து உலகங்களையெல்லாம் நடுங்கச் செய்தான். அசுர சேனைகள் சூழ இந்திரனுலகிற் சென்று முற்றுகையிட்டுச் சங்கத்தை ஊதினான். இந்திரன் பலியின் படை பலத்தையும் முனிவர்கள் தந்த வரங்களையும் உணர்ந்து பயந்து சுவர்க்க லோகத்தைவிட்டுத் தேவர்களுடன் ஒளிந்து ஓடினான். பலியானவன் மூன்று உலகங்களையும் வசப்படுத்திக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான். பிறகு நூறு அசுவமேத யாகங்களைச் செய்து பெரும் புகழ் படைத்துச் சகல சம்பத்துடன் விளங்கினான்.

தேவமாதாவாகிய அதிதி தேவி தன் மக்களாகிய தேவர்களுக்குத் தைத்யர்களாலே உண்டான துன்பத்தை அறிந்து கணவராகிய காசிபரைக் குறித்துத் தவமிருந்தாள். வெகுகாலத்திற்குப்பின் காசிபர் சமாதியினின்றும் வெளிப்பட்டு அதிதியின்பால் வர, அதிதி கணவனைக் கண்டு முறைப்படி பூசித்து ''என் புதல்வர்க்கு வாழ்வு உண்டாகுமாறு அருள்புரிவீர்'' என்று வேண்டினாள். காசிபர் ''பெண்மணியே! வருந்தற்க, எனது பிதாவாகிய பிரமதேவர் எனக்கு உபதேசித்த இதனை அனுஷ்டிப்பாயாக. பால்குணமாதம் சுக்கிலபட்சத்திலே பிரதமை முதல் பன்னிரண்டுநாள் மிகுந்த பயபக்தியுடன், பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமனை வழிபாடு செய்வாய். இதற்குப் பயோவிரதம் என்று பேர். இவ்விரத பலத்தால் எண்ணிய நலனை நீவிரைவில் பெறுவாய்'' என்று அப்பயோவிரதத்தை நோற்கும் முறைகளையும் துவாதசாக்ஷர மகா மந்திரத்தையும் உபதேசித்து அருள் புரிந்து காசிபர்நீங்கினார்.

அதிதி தேவி அந்த அரிய விரதத்தை அன்புடன் அனுஷ்டித்து அரவணைச் செல்வனை வழிபட்டனள். வாசுதேவர் சங்கு



சக்ர கட்க கேடகத்துடன் அவள் முன் தோன்றியருளினார். அதிதி, பெருமானைத் தெரிசித்து அஞ்சலி செய்து துதித்துத் தன் குறைகளை விண்ணப்பித்து நின்றாள், பகவான் ''அம்மா! அதிதி தேவியே! நின்னுடைய மைந்தர்களாகிய வானவர்கள் சுவர்க்கத்தை இழந்து பலியினால் துன்புறுவதைக் கண்டு மிகவும் வருந்தி என்னை ஆராதித்தனை. தேவர்களுக்கு இப்போது நற்காலமில்லை, அவர்களுக்குப் பராக்கிரமம் இப்போது உண்டாவது அரிது. ஆயினும், நின் விரதபலத்தால் உண்டாக்கி வைக்கின்றேன். உனது பதியினிடத்தில் என்னுடைய இந்த உருவத்தைத் தியானித்துப் புத்திர பாக்கியத்தை அடைவாயாக. உனது துன்பத்தை நீக்கித் தேவர்கட்கு இன்பத்தைத் தருவதற்காக நான் நினக்கு மைந்தனாக வருவேன்'' என்று சொல்லி மறைந்தருளினார். அதிதி மிகவும் மகிழ்ந்து பகவானைத் தியானித்துப் பதியாகிய காசிபரை அடைந்தாள். அரியினுடைய அமிசம் தன்னிடம் வந்து சேர்ந்ததைச் சமாதியினால் அறிந்த காசிபர், அந்த அரியின் அமிசத்தை அதிதியிடம் ஸ்தாபித்தார். காசிபரால் கர்ப்பாதானம் செய்யப்பட்ட அதிதி கருவிருந்தாள். பகவான் நீலநிறத்தை உடையவராயும், இரு மகர குண்டலங்களையுடையவராயும், ஸ்ரீவச்சம் என்னும் மருவை வக்ஷிலேயுடையவராயும் கவுஸ்துப மணியையும், மணிமகுட ஆரகேயூர இரத்தினாலங்க்ருதராயும் அதிதியினிடத்தில், சுக்கிலபட்சசிரவணி துவாதசியில் ஸ்ரீவாமனமூர்த்தியாகத் திருவவதாரம் புரிந்தார். தேவ துந்துபி முழங்கிற்று. விண்ணவர் தண்மலர் பொழிந்தனர். வாமன மூர்த்தியைக் கண்டு அதிதி தேவியும் காசிப முனிவரும் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார்கள். அருந்தவ முனிவர்கள் சாதகருமம் முதலிய வைதீக கருமங்களைச் செய்து உபநயனமும் செய்து வைத்தனர். வாமன மூர்த்திக்குக் கதிரவன் காயத்திரியை உபதேசித்தான். பிரகஸ்பதி பிரம சூத்திரத்தைக் கொடுத்தார். காசிபர் மூஞ்சியைக் கொடுத்தார். பூமிதேவி கிருஷ்ணாசனத்தைக் கொடுத்தாள். சந்திரன் தண்டத்தைக் கொடுத்தான். பிரமன் கமண்டல பாத்திரத்தைக் கொடுத்தார். குபேரன் பாத்திரத்தைக் கொடுத்தான். உமாதேவியார் பிக்ஷையைக் கொடுத்து ஓமஞ் செய்தார்.

வாமன மூர்த்தி அதன்பிறகு பலிச்சக்ரவர்த்தி பிருகு வமிசமுனிவர்களைக் கொண்டு செய்கின்ற அசுவமேத யாக சாலையிற் புகுந்தார். அவருடைய திருமேனியின் ஒளியால் அக்னியும் ஆதித்தனும் ஒளி மழுங்கினார்கள். யாகசாலையிலுள்ளோர் அவரைக்கண்டு வியப்புற்றார்கள். அவரைக் கண்டு யாகபதியாகிய பலி எழுந்து எதிர்சென்று அடி வணங்கி ஆசனந் தந்து திருவடியைப் பூசித்து அப்பாதநீரைத் தன் தலையிற் தெளித்துக் கொண்டு, ''இன்றே அடியேன் புனிதனாயினேன், உங்கள் வரவு நல்வரவு. உமது பார்வையால் அடியேன் பரிசுத்தமடைந்தேன். உமது பாதோகத்தால் என் பாவமெல்லாம் நசித்தன. என் பிதிரர்களும் மகிழ்வுற்றார்கள். யாசிக்க வந்தவராக உம்மைக் குறிப்பினாலுணர்கிறேன், வேண்டியதைக் கேளும், உடனே தருகிறேன்'' என்று கூறினான்.

பகவான் பலியின் அந்த இதமான வசனங்களைக் கேட்டு மகிழ்ந்து, ''மூவுலகாதிபதியே! உனக்குப் பிரகலாதரும் பிருகு வமிசமுனிவரும் குருவாக இருக்கின்றார்கள். உமது வார்த்தை ஒரு பொழுதும் பொய்க்காது. யாசிக்கும் யாசகனுக்கு கொடுக்கிறேன் என்று சொல்லி விட்டுப் பின் இல்லை என்று அவமானம் பண்ணுகிறானோ அவன் இந்தக் குலத்தில் இல்லை. பிரகலாதனின் பேரனாகிய நீசொற்சோர்வு படாதவன். உனது பிதாவாகிய விரோசனன் வேதியவுருக்கொண்ட விண்ணவர்க்குத் தன் ஆயுளையெல்லாங் கொடுத்தான். அத்தகைய புகழ்பெற்ற குலத்தில் பிறந்த உன்னிடத்தில் என்னுடைய அடியினால் அளக்கப்பட்ட மூன்றடி பூமியை யாசிக்கிறேன். சக்கரவர்த்தியும் மகா தாதாவுமாகிய நீஇதனைக் கொடுப்பாயாக'' என்றார். பலிச்சக்ரவர்த்தி புன்முறுவல் கொண்டு ''ஐயா! நீர் சிறுபிள்ளையாயிருப்பதால் சிறு பயனை விரும்புகின்றீர். மூன்று த்வீபத்தையும் கொடுக்குந் தகுதியுடைய என்னைப் புகழ்மொழிகளால் பூசித்து மூன்றடியை யாசிக்கின்றீர். வேண்டாம். நிரம்ப விசாலமான பூமியைக் கேளும்'' என்றான். பகவான், ''பலியே! ஆசைக்கோ அளவில்லை. மூன்றடியால் திருப்தியடையாதவன் மூவுலகங்களாலும் திருப்தியடைய மாட்டான். நான்கேட்ட மூன்றடியிடத்தைக் கொடுத்தால் போதும்'' என்றார். பலிச்சக்ரவர்த்தி ''அப்படியே பெற்றுக் கொள்ளும்'' என்று பூதானம் செய்ய நீர்ப்பாத்திரத்தைக் கொண்டு வந்தான். அப்போது சுக்கிராசாரியார் தனது சீடனாகிய பலியை நோக்கி, ''அன்பனே! இங்கு வாமனனாய் வந்திருப்பவன் ஸ்ரீமந் நாராயணனே யாவன். இவன் அதிதி மைந்தனாய் தேவர்கட்கு அநுகூலம் புரிய

வந்திருக்கின்றான். இவன் வஞ்சனைக்கு மயங்கி விடாதே! வஞ்சனையாய் யாசிப்பவர்கட்குக் கொடுக்ககூடாது. இந்தத் தானத்தால் நீஅழிவது திண்ணம். நின்னைச் சார்ந்தவர்களும் அழிவார்கள். ஆபத்தில் பொய் சொல்லலாம். ஆதலால், நீஅவசரப்பட்டு இவர் கேட்டதைக் கொடுத்துத் துன்பத்திற்கு ஆளாகாதே'' என்று தடுத்தனர். பலிச் சக்ரவர்த்தி, ''குருநாதா! பிரகலாதனின் பேரனாகிய நான் ஒருபோதும் அசத்தியனாக மாட்டேன். உயிர் நீங்கினும் கொடுக்கிறேன் என்றதைக் கொடுக்காமல் ஒளிக்க மாட்டேன். பூமிதேவி பொய்யனைத் தவிர மற்றவர்களைச் சிரமமின்றித் தாங்குகிறேன் என்று சொன்னாளல்லவா? நரகமே எனக்கு வரினும் இல்லை என்று சொல்ல இசையேன். தருமமே சிறந்த துணைவன். ஈத்துவக்கும் இன்பமே பெரிய இன்பம். ஈதலும் இசையுடன் வாழ்தலும் உயிர்க்குச் சிறந்த ஊதியங்களாம். ஆதலால், இவ்வாமனருக்கு இதனைத் தந்து பொன்றாப் புகழைப் பெறுவேன்'' என்றான். சுக்கிராசாரியார், ''விதியினால் ஏவப்பட்ட மூடனே! என் ஆணையை அவமதித்த நீவிரைவில் எல்லா ஐஸ்வர்யங்களையும் இழப்பாயாக'' என்று சபித்தார். பலி அதனால் சற்றும் சலிப்புறாது வாமனமூர்த்தியை முறைப்படி பூசித்துத் தண்ணீர் தாரைவிட்டு ''மூன்றடியைக் கொடுத்தேன்'' என்றான். அப்போது பலியின் மனைவியாகிய 'விந்தியாவலி' என்பவள், சுவர்ணகும்பத்தில் நீர் கொண்டுவந்து வாமனர் பாதத்தை அலம்பினாள். அந்தப் பாதத் தீர்த்தத்தைப் பலி தலையிற்றெளித்துக் கொண்டு புனிதனானான். அவனது கொடையின் திறத்தைக் கொண்டாடித் தேவர்களும் துந்துபிகளை முழக்கி மலர் மாரி பொழிந்தார்கள்.


அப்போது வாமன மூர்த்தியின் திருவுரு வளர்ந்து விசுவரூபங் கொண்டது. வாயுமண்டல சூரியமண்டல சந்திரமண்டல வன்னி மண்டலங்களையெல்லாங் கடந்தன. எல்லாத் தேவர்களையும் ஏழுகடல்களையும் எண்டிசைப் பாலகர்களையும் எல்லா நதிளையும் வேதங்களையும் பிறவற்றையும் அந்த அரியின் திருவுருவில் பலிச்சக்ரவர்த்தி கண்டான். திரிவிக்கிரமனான திருமால் பூமண்டல முழுவதையும் ஓரடியாலும், சுவர்க்க லோகத்தை ஓரடியாலும் அளந்தார். மூன்றாவது அடிக்கு அணுவளவும் இடமில்லாமற் போயிற்று. பகவான், ''பலியே! நின் சொல்லை நிறைவேற்றுவாயாக. அசத்தியன் நரகிற் செல்லுவான். :மூன்றாவது அடிக்கு இடம் எங்கே?'' என்று கேட்க, பலி, ''தேவ சிரேட்டரே! என்னுடைய சொல் பொய்க்காவண்ணம் உமது திருவடியை அடியேனது சென்னியில் வைத்தருள்வீர். நரகத்தை அனுபவிப்பதாயினும் சொன்னதை மாத்திரம் தவற மாட்டேன்'' என்றான். அப்போது பிரகலாதர் தோன்றிப் பெருமானை வணங்கி ''பலி உம்மால் காப்பாற்றத்தக்கவன்'' என்றார். பலியின் மனைவியாகிய விந்தியாவலி, ''எம்மை என்றும் காக்க வல்லவர் நீரே, உலக பரிபாலன மூர்த்தியாகிய நீர் உமது இயற்கையான கருணையால் காத்தருள்வீர்'' என்றாள். பிரமதேவர் ''எம்பெருமானே! சர்வ சொத்தையும் உமக்குச் சமர்ப்பித்த இந்தப் பலியை விட்டுவிடும். இவன் காக்கத் தக்கவன். அறுகம்புல்லையும் சிறிது நீரையும் கொண்டு பூசித்தவன் உத்தமமான கதியையடைகிறான். இந்தப் பலியோ உமக்கு மூன்று உலகங்களையுங் கொடுத்தவன். இவனை யாண்டருள்வீர்'' என்றார்.

பகவான், ''அன்புடைய பலியே! நீசுதலலோகத்தில் சுகமே இருப்பாயாக. உனது வாசலில் நான் எப்போதுமிருந்து உன்னைக் காப்பாற்றுவேன். உனக்கு நன்மை உண்டாகக் கடவது. இனி வரப்போகிற சாவர்ணி மனு வந்திரத்தில் நீஇந்திரனாகப் போகிறாய். நீஎப்போதும் என்னைத் தெரிசித்துக் கொண்டு இருப்பாயாக'' என்று அருள் புரிந்தார். பலியைச் சுதல உலகத்தில் இருத்திப் பகவான் அமரர்கட்கு அமராவதியைக் கொடுத்து அதிதையை மகிழ்வித்து இந்திரனுக்குத் தம்பியென்னும் முறையில் உபேந்திரனாகி விளங்கினார்.



# சிவராத்திரி மகிமை கூறும் திருவைகாவூர்

மகா சிவராத்திரி வழிபாட்டிற்குரிய தலங்களாகப் போற்றப்படும் திருக்கோகர்ணம், திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்), திருக்காளத்தி என்னும் வரிசையில் சோழ வளநாட்டிலுள்ள தலமாகத் திகழ்வது திருவைகாவூர் ஆகும். இதற்கெனசுவையான வரலாறுகள் உண்டு.



**தலவரலாறு**

ஒரு சமயம் தவநிதி என்ற முனிவர் திருவைகாவூர் ஆலயத்தில் தங்கியிருந்து வழிபட்டுக் கொண்டிருந்தார். அப்போது மான் ஒன்றை வேட்டையாட வேடன் ஒருவன் துரத்தி வந்தான். தப்பியோடிய மான், ஆலயத்திற்குள் புகுந்து தவநிதி முனிவரைத் தஞ்சமடைந்து. முனிவரும் அதற்கு அபயமளித்தார். இதனால் கோபம் கொண்ட வேடன், முனிவரைத் தாக்கத் தயாரானான்.

அடியாரின் துயரை நொடியில் தீர்க்கும் இறைவன், புலி உருவம் கொண்டு வேடனைத் துரத்தினார். உயிருக்குப் பயந்த வேடன், அங்கிருந்த மரத்தின் உச்சியில் ஏறிக் கொண்டான். புலியோ மரத்தடியிலேயே நின்று கொண்டிருந்தது. வேடனோ வேறு வழியின்றி மரத்தின் மீதே இருக்க வேண்டியதாயிற்று. பசியும் பயமும் அவனை வாட்ட, இரவும் வந்தது. களைப்பினால் தூக்கம் வந்துவிடுமென்பதால், தூங்காமலிருக்க மரத்திலிருந்த இலைகளை ஒவ்வொன்றாகப் பறித்துக் கீழே போட்டுக் கொண்டிருந்தான். அவன் இருந்த மரம் வில்வ மரம். அன்றிரவு மகாசிவராத்திரியானதால் அவன் பறித்துப் போட்ட இலைகள் அனைத்தும் புலி வடிவில் இருந்த சிவபெருமான் மீது அர்ச்சனைகளாக விழுந்து கொண்டிருந்தன. இதனால் ஊண் உறக்கமின்றி சிவனை வழிபட்ட புண்ணியம் வேடனுக்குக் கிடைத்தது. இறைவன் அந்த வேடனுக்கு மோட்சமளித்து அருளினார்.

இந்நிலையில் விடிந்தால் அவனது ஆயுள் முடியும் காலம் வந்தது. பொழுது விடிந்ததும் வேடனின் உயிரைப் பறிக்க எமன் ஆலயத்திற்குள் நுழைந்தான். நந்திதேவர் தடுத்தும் கேளாமல் உட்புகுந்தான். உடனே, தட்சிணாமூர்த்தி வடிவில் தோன்றிய இறைவன், கையில் கோலேந்தி எமனை விரட்டினார். என்றாலும், எமன் விடவில்லை. இதற்கிடையில், சிவனின் கோபத்திற்கு ஆளான நந்தி, தன் சுவாசத்தினால் எமனை உள்ளே நுழையாமல் தடுத்தார். இந்த ஐதீகத்தை நினைவுபடுத்தும் வகையில் நந்தி வாயிலை நோக்கியவாறும் தட்சிணாமூர்த்தி கையில் கோலேந்தியும் காட்சிதருகின்றனர். என்று செவிவழிச்செய்திகள் கூறுகின்றன.

இச்சம்பவத்திற்குப் பின் எமன் ஆலயத்திற்கு எதிரே தனி தீர்த்தம் அமைத்து, நீராடி வழிபட்டுப் பேறு பெற்றான். அந்தத் தீர்த்தம் ஆலயத்தின் எதிரே பிரம்மாண்டமான குளமாக எம தீர்த்தம் எனும் பெயரில் அமைந்துள்ளது.



அனைத்தும் அழியக்கூடும் என்பதை உணர்ந்த வேதங்கள், சிவனை வணங்கி தம்மை அழிவிலிருந்து காத்துக்கொள்ள வழி கேட்டு இறைவன் கூறியபடி, இத்தலத்தில் வில்வமரமாக நின்று தவம் புரிந்து வழிபடுவதாகக் கூறுவர் இதனால் இத்தலம் வில்வவனம் என்றும், இங்கு உறையும் இறைவன் வில்வவனேசுவரர் என்றும் அழைக்கப்படுகிறார்.

இதேபோல சிவராத்திரியன்று தூங்கிக் கொண்டிருந்த ஒரு குழந்தையின் நகையை ஒருவன் திருடிய போது, அக்குழந்தையைக் கொலை செய்துவிட்டதாகவும், அடியாரின் வேண்டுகோளுக்கு இணங்க, அக்குழந்தையை இறைவன் மீண்டும் உயிர்ப்பித்ததாகவும் கூறப்படுகிறது. இதனால் மகவருளீசுவரர் என்ற பெயரும் இவருக்கு உண்டு.

இதேபோல கண்ணிழந்த பிராமணர் ஒருவர் வழிபட்டு கண்ணொளி பெற்றதாகவும் கூறப்படுகிறது.

**கல்வெட்டுக்கள்**

இத்தலம் சுமார் *1200* ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். கி.பி. *1914* ஆம் ஆண்டு தொல்லியல் துறை படியெடுத்து வெளியிட்ட ஆய்வறிக்கையில் இடம் பெற்றுள்ள பன்னிரண்டு கல்வெட்டுகள் மூலம் பல்லவர்களும் சோழ மன்னர்களும்



மேலும், கற்புக்கரசி ஒருத்தியின் சாபம் பெற்ற விஷ்ணு, அதனைப் போக்க இங்கு வந்து தவம் செய்ததால், அரியீசர் என்றும் இறைவன் அழைக்கப்படுகிறார்.

இதேபோல, அக்னியும் பிரம்மனும் தீர்த்தம் அமைத்து வழிபட்டுள்ளனர். அதனால் அக்னியின் ஒளி குறையும் தன்மை நீங்கியதாகவும், பிரம்மனின் படைப்புத் தொழில் மேம்பட்டதாகவும் புராணம் கூறுகிறது.

சப்தமாதர்கள் உத்தால முனிவரால் தமக்கு ஏற்பட்ட சாபத்தை நீக்கும் பொருட்டு, இங்குள்ள எம தீர்த்தத்தில் நீராடி, இறைவனை வணங்கி அஷ்டமா சித்திகளைத் திரும்பப் பெற்றனர்.

சிவனும் பார்வதியும் கயிலாயத்திலிருந்து தென்னாட்டிற்கு வந்தபோது, காவிரியின் வடகரையில் மிகச் செழிப்பாக அமைந்த திருவைகாவூரில் எழுந்தருளியதாகவும், இதனையறிந்த பூமாதேவி வந்து அவர்களை வணங்கி வழிபட்டதாகவும் கூறப்படுகிறது. அதையொட்டி இவ்வூருக்கு பூமிபுரம் என்ற பெயரும் வழங்குகிறது.

இதேபோல, ஊழிக்காலத்தில்

இந்த தலத்தில் செய்த திருப்பணிகளின் விவரங்களை அறிய முடிகிறது.

கி.பி. 868-இல் மூன்றாம் நந்திவர்மன் திருப்பணி மேற்கொண்டுள்ளான். முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1110) காலத்தில் கருவறை மண்டபம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் இவற்றைக் கருங்கல் கொண்டு திருப்பணி செய்துள்ளான். இரண்டாம் குலோத்துங்கன்(கி.பி. 1138), இரண்டாம் இராஜராஜன் (கி.பி. 1157 மற்றும் 1163 மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1198 மற்றும் 1211), மூன்றாம் இராஜேந்திரன் (கி.பி. 1251) ஆகிய மன்னர்களின் கல்வெட்டுக்களும் இவ்வாலயத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

**இலக்கியங்கள்**

இவ்வாலயத்தின் சிறப்புக்களை, திருஞானசம்பந்தர் தனது திருவைகாவூர்த் திருப்பதிகத்தில் பதினொரு பாடல்களில் விவரித்துள்ளார். திருநாவுக்கரசர் தனது க்ஷேத்திரக்கோவை திருத்தாண்டகத்தின் ஆறாம் திருமுறையில் வெஞ்சமாக்கூடல் மீயச்சூர் வைகா வேதீச்சுரம் விவீச்ரம் வெற்றியூரும் என இத்தலத்தைக் குறிப்பிடுகிறார்.

இதே போல பெரிய புராணத்தில், "விசயமங்கையினிடமகன்று மெய்யர்தாள் அசைவில்", வைகாவினிலணைந்த





பாடிப்போந்து இசைவளர் ஞானசம்பந்த ரெய்தினார், என்று திருஞான சம்பந்த நாயனார் புராணத்திலும் இத்தலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அருணகிரிநாதர் திருப்புகழில் "நாதகீத மலர்த்துளி பெற்றளி கோடுலாவிய முத்து நிரைத்தவைகாவூர்" எனபோற்றுகின்றார்.

சமஸ்கிருத மொழியில் அமைந்த வில்வாரண்ய க்ஷேத்திர மகாத்மியத்தில் இத்தலத்தின் பெருமைகள் கூறப்பட்டுள்ளது. கபிஸ்தலம் சி. வேலைய்ய தேசிகர் அவர்கள் இந்நூலை ஆதாரமாகக் கொண்டு 346 தமிழ் விருத்தங்களில் தல புராணம் இயற்றியுள்ளார். இவரின் மாணவரான தா.சிவலிங்கம் பிள்ளை அவர்கள் 40 பாடல்களை இயற்றிச் சேர்த்து 13 சருக்கங்களாகப் பிரித்து 386 பாடல்களுடன் 1894 ஆம் ஆண்டு இவ்வாலயத்தில் அரங்கேற்றியுள்ளார்.

**ஆலய அமைப்பு**

இராஜகோபுரம் இல்லாத எளிய நுழைவு வாயில். உள்ளே நுழைந்ததும், இடதுபுறம் தலமரமான வில்வமரங்களையும், தீர்த்த கிணற்றையும் தரிசித்துவிட்டு, வாயிலை நோக்கியவாறு அமைந்துள்ள நந்திதேவரைக் காண்கிறோம். இவரை வணங்கி சிறிய கோபுரத்துள் நுழைகிறோம். மேற்குப்

பிரகாரத்தின் தென்முனையில் வல்லபை விநாயகரும் நடுநாயகமாக ஆறுமுகப் பெருமானும் அமைந்துள்ளனர்.

வடக்குப் பிரகாரத்தில் சர்வஜனரட்சகி எனப்படும் வளைக்கை நாயகியின் தனி ஆலயம் அமைந்துள்ளது. அன்னையின் தோற்றம் மிகவும் எழிலானது. தாயைப் பிரிய மனமில்லாத சேயாக ஒரு விநாயகரும் உடன் அமர்ந்துள்ளார்.

இவரைத் தரிசித்து சண்டிகேசுவரரையும் வணங்கி, கிழக்கே சென்றால் நடராஜப் பெருமானுக்குத் தெற்கு நோக்கிய தனிக் கோயில் அமைந்துள்ளது. இதில் சிவகாமி அன்னை மற்றும் மணிவாசகரின் திருவுருவங்களும் உள்ளன.

மகாமண்டபத்தில் நுழைந்தவுடன் வலப்புறத்திலுள்ள சப்த லிங்கங்களைத் தரிசித்துவிட்டு, அர்த்த மண்டபத்தினுள் நுழைகிறோம். வடபுறத்தில் கையில் கோலேந்திய தட்சிணாமூர்த்தியைக் காண்கிறோம். அலங்கார மேடையின் மேற்குப்புற ஓரத்தில் உள்ள மேடையில் விஷ்ணு, பிரம்மா, மோட்சம் பெற்ற வேடன், அவனைத் தேடி வந்த வேடச்சி ஆகியோரது சிலைகள் உள்ளன. அர்த்த மண்டபத்தில் அமைந்துள்ள சிறிய நந்திதேவரும் வாசலை நோக்கியவாறு இருப்பது குறிப்பிடத்தக்கது. இவற்றைக் கடந்து உள்ளே சென்றால், மூலத்தானத்தில் வில்வநாதேசுவரர் சிவலிங்கத்திருமேனியாகக் காட்சி தருகிறார். இவர் திருவைகாவூருடைய மகாதேவர் என்றும் அழைக்கப்படுகிறார். சுயம்பு வடிவான இவரைத் தரிசிக்கும்போது இத்தலத்துத் திருவிளையாடல்கள் அனைத்தும் நம் கண்முன்னே காட்சிகளாகத் தெரிகின்றன. கருவறைச் சுற்றில் நர்த்தன விநாயகர், அகத்திய முனிவர், தெற்கே தட்சிணாமூர்த்தி, மேற்கே கஜசம்மார மூர்த்தி, வடக்கே பிரம்மன், அர்த்தநாரீஸ்வரர், துர்க்கை, பைரவர் முதலானோர்சிலைகள் உள்ளன.

**தலம்-தீர்த்தம்**

தலமரம் வில்வம். தீர்த்தம் கொள்ளிடம் (ஆறு) எம தீர்த்தம் (குளம்), அக்னி தீர்த்தம் (கிணறு) மற்றும் பிரம்ம தீர்த்தம் (கிணறு)

**விழாக்கள்**

மாசி மாதத்தில் வரும் மகாசிவராத்திரி விழாவே இவ்வாலயத்தின் முக்கிய விழாவாகும். அன்றிரவு நான்கு கால பூசைசிறப்புடன் நடைபெற்று அமாவாசையன்று பஞ்சமூர்த்திப் புறப்பாடும் தீர்த்தவாரியும் நடைபெறுகின்றன.




**அமைவிடம்**

கும்பகோணத்திலிருந்தும் சுவாமிமலையிலிருந்தும் பாபநாசத்திலிருந்தும் நகரப் பேருந்துகள் மூலம் எளிதில் திருவைகாவூர் வரலாம். இவ்வாலயத்தினைச் சுற்றிப் பல்வேறு தேவாரத் தலங்கள் அமைந்துள்ளன.

மரணத்தைக் கண்டு அஞ்சாத மனிதர்களே இல்லை. அந்த வகையில் மரண பயம் நீக்கி அருள்புரியும் தலமாக திருவைகாவூர் விளங்குகிறது இந்த இறைவனை வணங்கி வாழ்வில் நீண்ட ஆயுளையும் நிறைந்த செல்வத்தையும் பெறலாம்.

பனையபுரம்
அதியமான்


சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : திருமிகு த. பிச்சாண்டி, இ.ஆ.ப., முதன்மை செயலர் /ஆணையர்
தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை, சென்னை - 600 034. தொலைபெசி : 28334811/12/13
ஆசிரியர் (கூ.பொ.) : ம. தேவேந்திரன், பி.எஸ்சி., பி.எல்., துணை ஆணையர்
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929



சென்னை, டாக்டர் கலைஞர் கருணாநிதி நகர், அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயிலில் 9.10.2008 அன்று ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய அன்னதானக் கூடம் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவில் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலர் திரு. க. முத்துசாமி, இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை முதன்மை செயலர் மற்றும் ஆணையர் திரு. த. பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.







ஆறாவது படை வீடான சோலைமலை மண்டபம் அழகர்கோயில் அருள்மிகு முருகன் திருக்கோயிலில் 3.10.2008 அன்று ரூ.1.37 கோடி மதிப்பீட்டில் தங்கரத திருப்பணியினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. ஆ.தமிழரசி அவர்கள் ஆகியோரால் துவக்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலர் திரு. க.முத்துசாமி, இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை முதன்மை செயலர் மற்றும் ஆணையர் திரு. த. பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 06-08 / WPP No. 451/06-08

அருள்மிகு அண்ணாமலையார் துணை



# அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில்
# திருஅண்ணாமலை-606601

## திருக்கார்த்திகை தீபத்திருவிழா 2008ம் ஆண்டு அழைப்பிதழ்

பஞ்சபூதத் தலங்களில் அக்கினித்தலமான இத்திருக்கோயிலின் திருக்கார்த்திகைத் தீபத்திருவிழா இவ்வாண்டு 29.11.2008 முதல் 15.12.2008 முடிய கீழ்க்கண்ட விவரப்படி வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

### திருக்கார்த்திகை பிரம்மோற்சவ விபரம்

(1418-ஆம் பசலி - 2008-ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்கள்)

| எண் | ஆங்கில தேதி | தமிழ் வருடம் மாதம் | தேதி | கிழமை | விழா விவரம் | உற்சவம் - வாகனங்கள் விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 29.11.2008 | திருவள்ளுவராண்டு 2039 கார்த்திகை திங்கள் | 14 | சனி | | ஸ்ரீ துர்க்கை அம்மன் உற்சவம் |
| 2 | 30.11.2008 | | 15 | ஞாயிறு | | ஸ்ரீ பிடாரி அம்மன் உற்சவம் |
| 3 | 01.12.2008 | | 16 | திங்கள் | | ஸ்ரீ விநாயகர் உற்சவம் |
| 4 | 02.12.2008 | | 17 | செவ்வாய் | 1 | துவஜாரோகணம் (காலை 5.30 மணிக்குமேல் 6.45 மணிக்குள்) |
| 5 | 03.12.2008 | | 18 | புதன் | 2 | வெள்ளி இந்திர விமானம் |
| 6 | 04.12.2008 | | 19 | வியாழன் | 3 | சிம்ம வாகனம், வெள்ளி அன்ன வாகனம் |
| 7 | 05.12.2008 | | 20 | வெள்ளி | 4 | வெள்ளி கற்பக விருட்சம், காமதேனு வாகனம் |
| 8 | 06.12.2008 | | 21 | சனி | 5 | வெள்ளி ரிஷப வாகனம் |
| 9 | 07.12.2008 | | 22 | ஞாயிறு | 6 | வெள்ளி ரதம் |
| 10 | 08.12.2008 | | 23 | திங்கள் | 7 | மகா ரதம் (காலை 5.30 மணிக்குமேல் 8.45 மணிக்குள் வடம் பிடித்தல்) |
| 11 | 09.12.2008 | | 24 | செவ்வாய் | 8 | மாலை 4.35 மணிக்கு ஸ்ரீபிட்சாண்டவர் உற்சவம். இரவு குதிரை வாகனம் |
| 12 | 10.12.2008 | | 25 | புதன் | 9 | கைலாச வாகனம், காமதேனு வாகனம் |
| 13 | 11.12.2008 | | 26 | வியாழன் | 10 | காலை 4,00 மணிக்கு பரணி தீபம் மாலை 6.00 மணிக்கு மகா தீபம் |
| 14 | 12.12.2008 | | 27 | வெள்ளி | | இரவு ஸ்ரீ சந்திரசேகரர் தெப்பல் உற்சவம் ஸ்ரீ பெரிய நாயகர் கிரிபிரதக்ஷணம் |
| 15 | 13.12.2008 | | 28 | சனி | | இரவு ஸ்ரீ பராசக்தி அம்மன் தெப்பல் உற்சவம் |
| 16 | 14.12.2008 | | 29 | ஞாயிறு | | இரவு ஸ்ரீ சுப்பிரமணியர் தெப்பல் உற்சவம் |
| 17 | 15.12.2008 | | 30 | திங்கள் | | ஸ்ரீ சண்டிகேசுவரர் உற்சவம் |

**திரு. மா.புகழேந்திரன்,** பி.ஏ., பி.எல்.,
இணை ஆணையர் / செயல் அலுவலர்

**திரு. வ.தனுசு,** எம்.எஸ்சி.,
அறங்காவலர் குழுத் தலைவர்

திரு. பெ. கோவிந்தன்,
திரு. க.மணிவர்மா, (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்),
திருமதி அ.பானுமதி அருணகிரி, திரு.இர,சீனிவாசன்
அறங்காவலர்கள்